பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 27 வியாழக்கிழமை (09.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :74

## ஜெனீவாப் பேச்சுக்கு நிகழ்ச்சி நிரல் என்ன?

### உடனடியாகத் தெளிவுபடுத்த அரசைக் கேட்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு,பெப்ரவரி 9

எதிர்வரும் 22ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள அமைதிப் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரலை உடனடியாக வெளியிட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்தது.

அமைதிப்பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அது தொடர்பான நிகழ்ச்சி நிரலை வெளியிடுவது அரசாங்கத்தின் மிகமுக்கிய பொறுப்பென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனீவாப் பேச்சுக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அரசும் புலிகளும் பேச்சுக்கான தமது பிரதிநிதிகளை ஏலவே தெரிவுசெய்துவிட்டனர் என ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

ஜெனீவா பேச்சின் நிகழ்ச்சி நிரலில் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுப்படுத்துதல் மட்டுமே உள்ளடங்குமென்று புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அமைதிப் பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரல் இதுவரை தயார் செய்யப்படவில்லையெனக் கூறியிருக்கிறார்.

முன்னைய காலத்திலிருந்து சமாதான

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே, சுவிஸ் தூதுவர்கள் இன்று கிளிநொச்சி வருவர்

கிளிநொச்சி,பெப்.9

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பான முன்னேற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு நோர்வே மற்றும் சுவிஸ் ஆகிய நாடுகளில் தூதுவர்கள் இன்று கிளிநொச்சி வருகின்றனர்.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், சுவிஸ் தூதுவர் பெர்னாடினோ ரொகாஜ்கோ ஆகிய இருவருமே இவ்வாறு கிளிநொச்சி வருகைதரவுள்ளனர்.

கொழும்பிலிருந்து விசேட ஹெலி மூலம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் - புலிகள் மட்டக்களப்பில் நேற்றுச் சந்தித்துப்பேச்சு

மட்டக்களப்பு,பெப்.9

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தலைமையிலான குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

மட்டக்களப்பு கரடியனாறு தேனகத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்ற இச்சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்தது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுடன், கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், கட்டளைத் தளபதி கேணல்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனுக்கள் ஏற்கப்படுவதைத் தடைசெய்து இடைக்கால உத்தரவு விடுக்க நீதிமன்று மறுப்பு

### ஐ.தே.கட்சியின் பிரதான கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு.பெப்.9

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்றுமுதல் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கையில் -

இந்த வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவு விடுப்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் என்.கே.கே.வேரகொடவினால் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பரிசீலித்தது. ஆனால், இடைக்காலத் தடை உத்தரவை விடுக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், சிசர டி ஆப்ரு ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரச குழுவிற்கான பயிற்சிப் பட்டறையில் ஜீ.எல். பீரிஸ், ஒஸ்ரின் விளக்க விரிவுரை

### ஐ.தே.க. அரசின் பேச்சுக் குழுவின் பட்டறிவுப் பகிர்வு

கொழும்பு.பெப்.9

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச தூதுக்குழுவிற்கான நான்கு நாள் பயிற்சிப் பட்டறையின் நேற்றைய இரண்டாம் நாள் அமர்வில் அமைதி முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் அனுபவம் விலாவாரியாக விளக்கப்பட்டிருக்கிறது.

முன்னைய ஐ.தே.க. ஆட்சியில் அமைதிப் பேச்சுகளில் கலந்துகொண்ட பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோரே இவ்வாறு கலந்துகொண்டு தமது அனுபவங்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

அமைதி முயற்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு அப்போதைய அமைதிப் பேச்சுகளின் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதன்மூலம் அமைதி முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்பட வழியேற்படுமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இதனடிப்படையில் நேற்றைய பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் முன்னைய பேச்சுகள், பேச்சுகள் நடைபெற்றபோது களத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், அவற்றை தீர்த்துக் கொண்ட விதம் உட்பட

(14ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை இன மதத் தலைவர்கள் தமிழ்ச்செல்வனுடன் நேற்றுச் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பெரும்பான்மை மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று புதன்கிழமை சந்தித்துப் பேசினர்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

பெரும்பான்மை மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழுவுக்கு மைக்கல் டி வாஸ் தலைமை வகித்தார்.

அரசாங்கமும், புலிகளும் பேச்சுகளைத் தொடங்கி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்று அக்குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழுவை வரவேற்றுப் பேசிய சு.ப.தமிழ்ச்செல்வன், அமைதி முயற்சிகளுக்காக அவர்கள் முன் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதைப் பாராட்டினார்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மஹாராஜா தலைவரைக் கொல்லும் திட்டம்: சதி பற்றிய தொலைபேசி உரையாடல் புலனாய்வாளர்கள் விரிவாக ஆராய்வு

கொழும்பு, பெப்.9

மஹாராஜா கூட்டுநிறுவனத் தலைவரைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் குறித்தான விசாரணைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லையென்று குற்றப் புலனாய்வு பொலீஸார் நேற்று கொழும்பு நீதிவான் மொஹமட் இர்ஷதீன் முன்னிலையில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றபோது, இது தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு காலஅவகாசம் தேவையென்றும் குற்றப்புலனாய்வுப் பொலீஸார் நீதிவானிடம் கோரினர்.

பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவன் பிரின்ஸ் கொலமிடம் இது தொடர்பில் வாக்குமூலம் பெறபட்டுள்ளதாகவும் இந்த சதித்திட்டம் பற்றிய தொலைபேசி உரையாடல்கள் குறித்து விரிவாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் குற்றப்புலனாய்வு பொலீஸார் மன்றில் தெரிவித்தனர். இதனையடுத்து இந்த வழக்கு விசாரணை மே மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-க)

## கடத்தப்பட்டோரை விடுவிக்கக் கோரி வெலிகந்தையை நோக்கி ஆட்சேபப் பயணம் ஆரம்பம்

மட்டக்களப்பு.பெப்.9

ஒட்டுப்படையினர் எனக் கருதப்படுவோரால் வெலிகந்தையில் வைத்துக் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்களைத் தேடி அவர்களின் உறவினர்கள் குழுவொன்று ஆட்சேபப் பயணம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றது.

மட்டக்களப்பிலிருந்து இந்தப் பயணத்தில் செல்வோர் தமது உறவினர்கள் விடுவிக்கப்படும் வரை வெலிகந்தை இந்து ஆலயத்தில் முகாமிட்டிருப்பார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போனவர்களை விடுவிக்கும் முயற்சியில் காட்டப்படும் தாமதம் இந்த நடவடிக்கையின்போது சம்பந்தப்பட்டவர்களி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மதப் பிரதிநிதிகள் நேற்றுச் சந்தித்போது.... (எ-6)

## கொக்குவில் மயான நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.9

கொக்குவில் இந்து மயான நிர்வாக சபைத் தெரிவு எதிர்வரும் 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மயானத்தைப் பயன்படுத்தும் பொதுமக்களை இதில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச வரியிறுப்பாளர் சங்கம் கேட்டுள்ளது. (ஒ)

# இராணுவத்திடம் இருந்து தப்பவே தமிழகத்தில் தஞ்சம் புகுந்தோம்!

### ஈழ அகதியின் கோரிக்கை

இராமேஸ்வரம், பெப்.9

''இலங்கையில் தமிழர்கள்மீது தாக்குதல் நடத்தும் சிங்களப்படையினர் அந்தப்பழியை புலிகள்மீது போடுகின்றனர். தமிழர்கள்மீது கண்டபடி தாக்குதல் நடத்தும் இராணுவத்திடமிருந்து உயிர் தப்புவதற்காகவே தமிழகத்திற்கு அகதிகளாக வந்துசேர்ந்தோம்.''

- இவ்வாறு கண்ணீர்மல்கக் கூறியிருக்கிறார் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்த அகதி ஒருவர். யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களிலிருந்து சுமார் 32 அகதிகள் நேற்றுமுன்தினம் இருபடகுகளில் தனுஷ்கோடி மற்றும் அரிச்சல்முனை ஆகிய இடங்களை வந்தடைந்தனர்.

இவ்வாறு அகதிகளாக வந்தவர்களில் ஒருவரான - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த - ராஜி என்பவர் கருத்து வெளியிடும்போது கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் சிங்களப்படையினர் காட்டுமிராண்டித்தனமாக செயற்படுகின்றனர். சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யும் இளைஞர்களை சுட்டுக் கொலைசெய்யும் இராணுவத்தினர், பலரை சிறையில்அடைத்து விடுகின்றனர். கிராமங்களுக்குள் புகுந்து தமிழர்களைக் குறிவைத்து படையினர் தாக்குதல் நடத்துவதால் தமிழர்கள் அச்சம் காரணமாக வெளியேறிவருகின்றனர். தமிழர்களை சுட்டுவிட்டு அந்தப் பழியை புலிகள் மீது போடுவதுதான் வாடிக்கையாக இருக்கிறது.

-இவ்வாறு தெரிவித்தார் அந்த அகதி.

தனுஷ்கோடி பொலீஸ் நிலையத்தில் நீண்ட விசாரணைகளுக்குட்படுத்தப்பட்ட பின்னர் இவர்கள் அனைவரும் அகதிமுகாம்களில் சேர்க்கப்பட்டனர். அண்மைக்காலத்தில் அகதிகளாக தமிழகம் சென்றோரின் எண்ணிக்கை இத்துடன் 450 பேரைத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

### யாழ். - மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட

# படையினர் தொடர்பான முறைப்பாடுகளை இராணுவப் பொலீஸாரே விசாரிப்பராம்!

### படைத்தலைமைப்பீடம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

இராணுவத்தினர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இதுவரை செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து இராணுவப் பொலீஸாரே விசாரணைகளை நடத்துவர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

எமது பணிமனையில் படையினரைத் தொடர்புபடுத்தி செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்து, இராணுவ அதிகாரிகளிடம் அறிக்கை கோரியிருந்தோம். இதற்கு இராணுவத் தலைமைப்பீடம் படையினரைச் சம்பந்தப்படுத்தி செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக இராணுவப் பொலீஸாரே விசாரணை நடத்துவர் என எமக்கு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இராணுவப் பொலீஸார் தாம் மேற்கொள்ளும் விசாரணை குறித்த அறிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-12-14)

# மலையகத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முயற்சி அந்தோ!

### தனித்தனி வழி போக அவை முஸ்தீபு?

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்களில் கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பில் மலையகக் கட்சிகள் எடுத்திருந்த தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மலையகத்தின் பிரதான அரசியற்கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் தேர்தலில் ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்காக இ.தொ.கா. முக்கியமான நிபந்தனைகளையும், கோரிக்கைகளையும் அரசாங்க்த்திடம் முன்வைத்திருப்பதாகவும் இதன் அடிப்படையில் இ.தொ.கா. தேர்தலில் ஆளுங்கட்சியுடன் களமிறங்கக்கூடிய சூழ்நிலை உள்ளதாகவும் அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, அமைதி முயற்சிகள் கைகூடியிருக்கும் தற்போதைய நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து தேர்தலில் நிற்பது எந்தத் தாக்கத்தையும் கட்சிக்கு ஏற்படுத்தாதென்று இ.தொ.கா. தலைமை கருதுவதாகவும் தெரிகிறது.

எவ்வாறாயினும், கூட்டாகத் தேர்தலில் நிற்பதாக முடிவெடுத்து அறிவித்தபின்னர் தற்போது மலையகக் கட்சிகள் தனித்தனியாகத் தீர்மானங்களை எடுத்துவருவது குறித்து அந்தந்தக் கட்சிகளுக்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. (எ-க)

# தமிழ் மரபைப் பின்பற்றிய புதுமுறைத் திருமணம் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று நடந்தேறியது!

யாழ்ப்பாணம் பெப்.9

தமிழ் மரபைப் பின்பற்றிய புதுமுறையிலான திருமணம் ஒன்று நேற்று நல்லூரில் சிறப்புற நடந்தேறியது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்,கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தம்பதியர் தலைமையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இந்தத் திருமணம் நடைபெற்றது.

தமிழ் முறையில் உள்ள பிரதான சம்பிரதாயங்களை உள்ளடக்கியதாக வித்தியாசமான முறையில் நடைபெற்ற இந்தத் திருமண நிகழ்வில் அந்தணர்களுடன் கூடிய சமயக் கிரியைகள் எவையும் இடம்பெறவில்லை. மணமகன், தோழன் ஆகியோர் தலைப்பாகை அணிந்துகொள்ளவில்லை.

இந்தத் திருமண நிகழ்வில் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து திருக்குறள் ஓதுதல் ஆன்றோர்களால் திருக்குறளுக்கு பொருள் கூறல், தலைவரின் முன்னுரை, மணமகன் உறுதியுரை, மணமகள் உறுதியுரை என்பன இடம்பெற்றன.

தொடர்ந்து மங்கல நாண் அவையினரின் ஆசீர்வாதத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தவேளை மங்கல வாழ்த்துப்பா ஓதுதல் இடம் பெற்றது.

பின்னர் திருமணத்தை தலைமை வகித்து ஒப்பேற்றிய பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் மாலையை எடுத்து மணமக்களுக்கு வழங்க மணமக்கள் மாறி, மாறி அணிந்து கொண்டனர்.

தொடர்ந்து மங்கல நாண் மணமகனால் பூட்டப்பட்டது.

அடுத்து தலைமை தாங்கும் தம்பதியினர், மணமக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்க மணமக்கள் தலைமைக்குரியயோரையும், பெற்றோரையும் வணங்கி ஆசிபெற்றனர்.

தொடர்ந்து அனைவரும் மணமக்களுக்கு ஆசிவழங்கினர். சான்றோர்கள் வாழ்த்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வங்கியாளர்கள் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியதைக் காணமுடிந்தது. (எ-12)





புதுமணத் தம்பதியர் உறுதியுரை எடுத்துக்கொண்ட போது... (படம்: பதிக்)

# புண்ணிய நாச்சியம்மையார் குருபூசைதின பண்ணிசைப் போட்டியில் 120 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ். சைவபரிபாலனசபையினர், புண்ணிய நாச்சியம்மையார் குருபூசைதினத்தை முன்னிட்டு நடத்தும் பண்ணிசைப்போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பரிசாக தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன வழங்கப்படும்.

சுமார் 120 மாணவர்கள் இந்தப் பண்ணிசைப் போட்டியில் பங்குகொள்கின்றனர் என்றும் - இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை நடைபெறவிருக்கும் புண்ணியநாச்சியம்மையார் குருபூசைதினவிழாவில் வைத்து வழங்கப்படும் என்று - சைவபரிபாலன சபையின் தலைவர் கலாநிதி வ.கந்தசாமி தெரிவித்தார். (எ)

# ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி சனியன்று ஆரம்பம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையால் நடத்தப்படும் திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் ஊர்காவற்றுறையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் இந்தச் சுற்றுப்போட்டியின் ஏனைய ஆட்டங்கள் எதிர்வரும் 12ஆம், 18ஆம், மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெறும்.

நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

✱ ஹற்றன் நஷனல் வங்கி அணி எதிர் வேலணைப்பிரதேச சபை அணி (இதில் வெற்றி பெறும் அணி பிராந்திய உள்ளூராட்சி அலுவலக அணியுடன் மோதும்)

✱ செலான் வங்கி அணி எதிர் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணி.

எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். ஆட்டங்கள்:-

✱ ஹற்றன் நஷனல் வங்கி ஆயுட் காப்புறுதி லிமிட்டெட் அணி எதிர் இலங்கை போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போ அணி (இதில் வெற்றி பெறும் அணி யாழ்.மாவட்ட செயலக 'ஏ' அணியுடன் மோதும்)

யாழ். மாநகரசபை 'ஏ' அணி எதிர் ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட அணி (இதில் வெற்றிபெறும் அணி தீவகக் கல்வி வலய அணியுடன் மோதும்)

மேற்படி சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் அணிகளின் வீரர்களை போட்டி நடைபெறும் தினங்களில் காலை 8.45 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு வருகை தரும்படி பிரதேச விளையாட்டுக் குழு கோரியுள்ளது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தாய்லாந்தில் சட்டகிப் பேச்சும் சுவிஸில் ஜெனிவாப் பேச்சும்

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஜெனிவாப் பேச்சுகளுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருக்கின்றன.

2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணிலின் அரசோடு விடுதலைப் புலிகள் நடத்திய பேச்சுக்கும் இப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசோடு நடத்தவிருக்கும் பேச்சுக்குமான களச்சூழலை ஒப்பிட்டு ஆராய்வது - நோக்குவது - இந்தக் காலகட்டத்தில் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

ரணிலின் அரசோடு 2002 செப்ரெம்பர் 16 - 18ஆம் திகதிகளில் தாய்லாந்தின் சட்டகிப் கடற்படைத் தளத்தில் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சும் ஜெனிவாவில் இப்போது 2006 பெப்ரவரி 22 - 23 இல் நடைபெறும் முதல் சுற்றுப் பேச்சும் களநிலவரங்களைப் பொறுத்தவரை பல விடயங்களில் ஒத்திருக்கினறன.

பிரதமர் ரணிலின் அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2002 பெப்ரவரி 22ஆம் திகதி கைச்சாத்தானது. ஆனாலும், அதன் பின் ஏழு மாதங்கள் கழித்தே விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு ரணிலின் அரசினால் கூட்டி வர முடிந்தது.

எனினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர் 2005 நவம்பர் 17ஆம் திகதிய தேர்தலில் வென்று, மூன்று நாள்களில் பதவியேற்று, மூன்று மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு இழுத்து வருகின்றார்.

ஆனாலும், இரண்டு சந்தர்ப்பங்களிலும் முதல் சுற்றுப் பேச்சுகளின் போது பேச்சு மேசையில் ஆராயப்பட்ட - அல்லது ஆராயப்படப் போகின்ற - விடயம் ஒன்றுதான்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்த ஏற்பாடுகளை இலங்கை அரசுத் தரப்பு சரிவர நடைமுறைப்படுத்தவில்லை என்ற புலிகளின் கடும் குற்றச்சாட்டுக்கு மத்தியிலேயே - அது குறித்துப் பேசவே - முதல் சுற்றுப் பேச்சுக்கு அப்போதும் சரி. இப்போதும் சரி புலிகள் இணங்கினர்.

போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு முப்படைகளினது கடுமையான போக்கும், ஒளிவு மறைவாக முன்னெடுக்கப்படும் சதித் திட்ட நடவடிக்கையும் காரணம் என்ற புலிகளின் சீற்றத்துக்கு மத்தியிலேயே இரண்டு சந்தர்ப்பங்களிலும் முதல் சுற்றுப் பேச்சுகள் ஆரம்பமாகின்றன.

ஆனால், அப்போதைக்கும், இப்போதைக்கும் ஒரு வித்தியாசம் இருப்பதை மஹிந்த அரசும் அவரது பேச்சுக் குழுவினரும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு, தாய்லாந்து சட்டகிப்பில் நடைபெற்ற அப்போதைய பேச்சுக்கான ஏற்பாடு குறித்து புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தமது நூல் ஒன்றில் தெரிவிக்கும் தலைப்பை நோக்குவது பொருத்தமானது. போர் நிறுத்த ஒப்பந்தக் கூடப்பாடுகளைக் கடைப்பிடிக்காது சிங்கள ஆயுதப் படைகள் காட்டும் கடும் போக்குக் குறித்த இவ்வாறு அச்சமயத்தில் அவர் குறிப்பிடுகின்றார்:-

*"ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ரணில் அரசிடம் இருக்கவில்லை என்பதை அவருக்கு (பிரபாகரனுக்கு) விளக்கினேன். அரசியல் தெளிவுடைய யதார்த்தவாதி என்பதால், ரணிலுக்கும், சந்திரிகாவுக்கும் மத்தியிலான அதிகாரப் போட்டியும் பிணக்குப் பற்றியும் பிரபாகரனால் புரிந்து கொள்ளமுடிந்தது. போர் நிறுத்த உடன்பாட்டு விதிகள் சீரிய முறையில் நடைமுறையாக வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க விரும்பிய போதும் அதற்கான அதிகாரம் அவரிடம் இருக்கவில்லை. சந்திரிகாவுடனான பகையுணர்வு கூர்மையடைந்து இருந்ததால் இராணுவ விவகாரத்தில் ஜனாதிபதியின் ஒத்துழைப்பையும் அவரால்பெறமுடியவில்லை. இந்தச் சிக்கலையும் ரணிலின் இயலாத்தன்மையையும் பிரபாகரன் நன்கு அறிவார்......*

*"தாய்லாந்தில் சாமாதானப் பேச்சுகளை நடத்துவதற்கு இணக்கம் தெவித்த பிரபாகரன், போர் நிறுத்த உடன்பாட்டின் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை மேசையில் பேசலாம் எனவும் தெரிவித்தார்."*

- இப்படி கூறுகிறார் மதியுரைஞர் பாலா.

ஆக, அப்போதும், இப்போதும் - இரண்டு சந்தர்ப்பங்களிலும் - போர் நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் பற்றிய சிக்கல்தான் முதற்சுற்றுப் பேச்சுக்கான தொனிப் பொருளாக அமைகிறது. ஆனாலும், முக்கிய வித்தியாசம் ஒன்று இருக்கிறது.

அப்போது, நிறைவேற்று அதிகாரத்தையும் படைகளைக் கட்டுப்படுத்தும் பதவி நிலையையும் வைத்திருந்த ஜனாதிபதி சந்திரிகாவுடன் முரண்பட்டுக் கொண்டு, அதிகாரமற்ற வெறும் பிரதமர் பதவியிலிருந்து ரணிலோடு பேசுகிறோம் என்ற பிரக்ஞையுடன்தான் புலிகள் அந்தப் பேச்சுகளில் பங்கு பற்றினர். போர்நிறுத்த கடப்பாடுகளை அமுலாக்கும் விடயத்தில் ரணிலின் அரசின் இயலாத்தன்மையையும், கையாலாகாத் தனத்தையும் அவர்கள் புரிந்து கொண்டிருந்ததால் அதிகளவு விட்டுக் கொடுப்புக்கு வாய்ப்பிருந்தது. அதனால், அப்போது பேச்சுகள் ஆறாவது சுற்றுவரை நகர்ந்தன.

ஆனால், இப்போது நிலைமை வேறு. அரசும், நிறைவேற்று அதிகாரமும், படைத்தலைமையும் அனைத்துமே ஒருவரிடம் - ஜனாதிபதி மஹிந்தவிடமே - குவிந்து கிடக்கின்றன. போதாக்குறைக்கு 'வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டுக் கொடுத்தமை போல' அரசின் சமாதான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தரத் தயார் என்ற அறிவிப்போடு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி காத்திருக்கின்றது.

ஆகவே, முன்னைய ரணிலின் அரசு போல சாக்குப் போக்குச் சொல்லாமல் யுத்த நிறுத்தம் தொடர்பான தனது கடப்பாட்டை முழுமையாக நிறைவு செய்வதற்கு இணங்கும் தயார் நிலையில் பேச்சுக்கு அரசுத் தரப்பு வருவதோடு, அதைச் செயலிலும் காட்ட வேண்டும். தவறுமானால் அடுத்த சுற்றுப் பேச்சு சாத்தியமற்றதாகி விடலாம்; நடைபெறாமலேயே போய் விடலாம்.

# ஜேர்மன் நாட்டு அமைப்பின் உதவியுடன் இயற்கை அனர்த்த எச்சரிக்கைக் கருவிகள்

## யாழ்.ஆயரிடம் ஜயலத் எம்.பி. கையளித்தார்

யாழ்ப்பாணம்,பெப்.9

ஜேர்மன் நாட்டின் சமூக அமைப்பு ஒன்றின் நிதியுதவியுடன் இயற்கை அனர்த்தங்களின் போது மக்களை முன்னெச்சரிக்கை செய்யும் 20 கருவிகள் (சைரன்) யாழ். மாவட்டத்துக்கென வழங்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட இந்தக் கருவிகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் வைத்து யாழ்.ஆயரிடம் கையளிக்கப்பட்டன.

கரித்தாஸ், கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் க.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கையளிப்பு நிகழ்வில் ஆசியுரையினை யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நிகழ்தினார்.


ஜேர்மன் சமூக சேவை அமைப்பின் பிரதிநிதி டொறின், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஆபத்து அறிவிப்புக் கருவிகளை ஜேர்மன் சமூக சேவை அமைப்பின் பிரதிநிதி யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்திடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார்.

தொடர்ந்து யாழ்.ஆயர் கரையோரப் பகுதியில் உள்ள தேவாலயங்களின் பங்குத் தந்தைமாரிடம் தலா ஒவ்வொரு அறிவிப்புக் கருவியினை கையளித்தார்.

இதில் புனித சாள்ஸ் மகா வித்தியாலய மாணவர்கள், பங்குத் தந்தைமார் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமியிடமும் ஆபத்து அறிவிப்புக் கருவி ஒன்று கையளிக்கப்பட்டதாக கூறப்பட்டது. (த-13-190-111)





ஆபத்து அறிவிப்பு கருவி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மறைக்கல்வி மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.நிகழ்வின் அரங்கில் பிரமுகர்கள் இறை பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதையும் யாழ்.ஆயர் தோமஸ்சௌந்தரநாயகம் அடிகளார் ஆசியுரை நிகழ்த்துவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன உரையாற்றுவதையும்-

ஜேர்மன் சமூக அமைப்பின் பிரதிநிதி டொறிங் இயந்திரத்தை இயக்கிக் காட்டுவதையும்- ஜேர்மன் சமூக அமைப்பின் மாணவி ஒருவர் பங்குத் தந்தை ஒருவரிடம் கருவியைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கவிதரன், தமிழினியன்)*

## உதயவாக்கு

தன்னலம் தேடும் நண்பர்கள் உனக்கு நெருக்கடி ஏற்படும் வேளையில் உன்னுடன் இருக்கமாட்டார்கள்.

*வேதாகமம்.*

## நாளை

தை 28
வெள்ளிக்கிழமை
10.02.2006
திதி: திரயோதசி
முழுவதும்
நட்சத்திரம் : புனர்பூசம்
பின்னிரவு: 05.27 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 06.34-08.04
ராகுகாலம் : 11.04 - 12.34
(யாவும் பழைய நேரப்படி)

# குருநகர்ப் பகுதியில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

குருநகர் பகுதியல் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நுளம்புப் பெருக்கம் அதிகமாக உள்ள இடங்களில் சூழலைப் பாதிக்காத வகையில் நச்சுப் புகையூட்டப்பட்டு நுளம்புகள் அழிக்கப்பட்டு வருவதாக யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவின் வைத்திய அதிகாரி மரியதாஸ் தெரிவித்தார்.

நுளம்புப் பெருக்கம் அதிகமாக உள்ள மதகுகள், வாய்க்கால்கள், பற்றைகள் மற்றும் வீடுகள் போன்ற இடங்களில் இந் நடவடிக்கை இடம்பெறுகின்றது.

மலத்தியோன் பவுடர், மண்ணெண்ணெய் போன்றவற்றை பயன்படுத்தி சிறியரக இயந்திரம் ஒன்றின் ஊடாக புகையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-14)

## சிறார் விவகாரங்களுக்கான ஐ.நா. பிரதிநிதி நியமனம்

ஐக்கிய நாடுகள் சபையில் ஆயுதப் போராட்டத்தில் சிறார் விவகாரங்களின் சிறப்பு பிரதிநிதியாக ராதிகா குமாரசுவாமி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 3ஆம் நிலை பொறுப்பு இது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவராக ராதிகா குமாரசுவாமி உள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிராக வன்முறைகள் தொடர்பான சிறப்பு பிரதிநிதியாகவும் ராதிகா குமாரசுவாமி முன்னர் பணியாற்றியிருந்தார். (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போயிட்டி லூர்து அன்னை வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.9

இளவாலை போயிட்டி புனிதலூர்து அன்னை ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

திருவிழாத் திருப்பலி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். (த-202)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.9

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நயினை, எஸ். சோமேஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய உடற்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமியும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர் த.அருணகிரிநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-190)

## தொழிலாளர் போதாது; நெல் அறுவடை தாமதம்

வலி.தென்மேற்கு,பெப்.9

வலி.தென்மேற்குப் பகுதியில் காலபோக நெற்செய்கையின் நெல் அறுவடை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நெல் அறுவடை செய்வதற்கு விவசாய கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையாக இருக்கின்றனர் என்றும் - இதனால் இப்பகுதியில் பல விவசாயிகள் தங்கள் காணிகளில் உரியகாலத்தில் நெல் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-135)

## வலி.தென்மேற்கில் சைக்கிள்களுக்கு உரிமம்

வலி.தென்மேற்கு,பெப்.9

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் 2006ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (த-135)

## கரபந்தாட்டப் போட்டியில் நாவற்குழி அ.த.க.சம்பியன்

தென்மராட்சி,பெப்.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 15 வயதுப் பிரிவு பெண்கள் கரபந்தாட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகளில் கைதடி- நாவற்குழி அ.த.க. பாடசாலை அணி முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனானது.

இரண்டாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணியும் மூன்றாமிடத்தை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணியும் பெற்றன.

கடந்த வருடம் இடம்பெற்ற மாகாண மட்ட கரபந்தாட்டப் போட்டிகளில் கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை 13 வயதுப் பிரிவு பெண்கள் அணி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-117)

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவில் மீள்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் கலைமாணி பகுதி I -2001 பரீட்சைக்கான மீள் பரீட்சார்த்திகளுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் ஏனையவர்களிடம் கடந்த ஜனவரி 20ஆம் திகதி முதல் கோரப்பட்டிருந்தன.

இதன் முதல் திகதி முடிந்த நிலையில் மீண்டும் பரீட்சார்த்திகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன எனவும்-

இதுவரை விண்ணப்பிக்கத் தவறிய ஏனையவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும்- யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் உதவிப் பதிவாளர் எஸ்.கே. பிரபாகரன் தெரிவித்தார்.

மீள் பரீட்சார்த்திகளும், ஏனைய பரீட்சார்த்திகளும் தமது விண்ணப்பங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-12)

## தென்மராட்சிப் பிரிவில் உள்ள மகளிர் சங்கங்களுக்கு கூட்டம்

தென்மராட்சி,பெப்.9

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகியோர் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சங்கங்களில் புதிதாக உருவாக்கப்பட்ட செயற்பாடுகள், அவை கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் சங்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார். (த-117)




ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் அலைன்ஸ் டெவலெப்மென்ட் றஸ்ட் பருத்தித்துறையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறை மீனவர் சங்கம் மற்றும் வலித்தூண்டல் மீனவர்சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 60 பயனாளிகளுக்கு சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வலைகள் வழங்கப்பட்டன. இதில் நிறுவனத்தின் இணைப்பாளர் எஸ்.சத்தியசீலன் மீனவர் ஒருவருக்கு வலைகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## மருதங்கேணி கோட்ட அலுவலர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.9

மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி இலங்கைக் கல்வி நிர்வாக சேவை வகுப்பு-III அல்லது அதிபர் சேவை தரம்-Iஐ சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைஅடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி பணிப்பாளருக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பி வைக்கும்படி பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-14-118)

## 11 அடி நீளமான மலைப்பாம்பு அல்லாரை வயலில் சிக்கியது

சாவகச்சேரி, பெப்.9

அல்லாரை, அறுகம்புலம் வயல் வெளியில் 11அடி நீளமானதும் ஒரு அடி சுற்றளவு கொண்டதுமான பெரியளவிலான (மலைப் பாம்பு) வெங்கணாந்திப் பாம்பு அந்தப் பகுதி இளைஞர்களால் சாதுரியமாகப் பிடிக்கப்பட்டு மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் அடித்துக் கொல்லப்பட்டது.

கடந்தவாரம்அல்லாரை, அறுகம்புலம், வயல் வெளியில் இளைஞர்கள் அருவி வெட்டிக் கொண்டிருந்த வேளை, நெல் வயலில் இந்த மலைப்பாம்பைக் கண்டனர். உடனடியாக செயலில் இறங்கிய இளைஞர்கள் அதனை மடக்கிப் பிடித்தனர். பின்னர் அது அடித்துக் கொல்லப்பட்டது.

இந்த மலைப்பாம்பு பொதுமக்களின் பார்வைக்காக அல்லாரைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அடித்துக் கொல்லப்பட்ட மலைப்பாம்பில் இருந்து - அப்பகுதி இளைஞர்கள் பாம்புத் தைலம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. பெருமளவு பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பாம்பைப் பார்வையிட்டனர்.(த-31)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கரந்தன், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் நேற்று (08-02-2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியம் (ராசா) அவர்களின் அன்பு மனைவியும் செல்வராஜா, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, ராஜரட்ணம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியதேவி (கனடா), மகேந்திரன்(கனடா), சரஸ்வதி (மணி),கனகாம்பிகை (கனடா), ஜெயசீலன் (சீலன்) ஆகியோரின் அன்புத்தாயும் புஷ்பரட்ணம் (கனடா), தர்மராஜா (நியூ சிற்றி பெயின்ட்), சற்குணநாதன்(ஜேர்மனி), தயாநிதி ஆகியோரின் மாமியாரும் செல்லா, கௌசி, துளசி, தமயந்தி, கவிதா, தர்ஷினி, சுபாஷினி, பிரஷாந்தினி, துஷ்யந்தினி, தனுஷா, கோகுலன், றமணன், செந்தூரன், டினேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-02-2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 2மணிக்கு தகனக்கிரியைக்காக உரும்பிராய், இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

*கரந்தன்,* சு.ஜெயசீலன் *(சீலன்),*

*நீர்வேலி.* (46571)(26-19-17) சு.தர்மராஜா, *(நியூசிற்றி பெயின்ட்).*

(21) ஆவது அகவையில் கால் பதிக்கும்......

கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அருகில்)

மகளிருக்கான துரித ஒரு மாத/3 மாதப் பயிற்சிகள்

- கேக் ஐஸிங் (24 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐஸிங் முறைகள்)
- உணவு தயாரித்தல் (மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள்)
- கூந்தல் அலங்காரம் (20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் போடுதல்)
- அடிப்படை Facial கலையும் மணப்பெண் அலங்காரமும்
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாரி பிளவ்ஸ் Saree - Blouse வெட்டித்தைக்கும் முறை
- 3 மாத Fabric Painting பூவேலை, கைவேலைப் பயிற்சிகள்
- 6 மாத உடை தயாரித்தல் (தையற்கலை) பயிற்சிகள்

• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.

கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம் : 10.02.2006
சனி - ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம் : 11.02.2006

... மணி வரை நேரில் வரவும்.

இயக்குநர்.

## பால்மா பக்கெற்றுகள் அன்பளிப்பு

குருநகர்,பெப்.9

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் உள்ள சிறுகுழந்தைகளுக்கு கடந்த வாரம் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் வைத்து 'கோன்சோயா' மா பைக்கெட்டுக்களை ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியினர் வழங்கினர்.

சுமார் ஆயிரத்து 864 குழந்தைகளுக்கு இப் பக்கெற்றுகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-51)

## விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.9

அரியாலைப் பிரதேசத்தின் 87 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு மாவட்ட அணிகளுக்கிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஏழுபேர் பங்குபற்றும் 12 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டம், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அரச சார்புடைய நிறுவனங்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டம், பெண்களுக்கான வலைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-202)

## வட்டக்கச்சி இராமநாதபுரம் ஒன்றியம்

சுவிற்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உதவும் முக்கிய நோக்கத்துடன் ஒன்றியம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இம்மாதம் ஐந்தாம் திகதி சூரிச் மாநிலத்தில் நடைபெற்ற ஒன்றுகூடலின்போது மேற்படி ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. புலம்பெயர்ந்து வாழ்வோர் எந்த வகையில் மேற்கூறிய பகுதிகளின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் உதவமுடியும் என்பது குறித்து ஒன்றுகூடலில் விரிவாக ஆராயப்பட்டது.

ஒன்றியத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் கிருஸ்ணபிள்ளை உதயகுமார், உபதலைவர் சிவசிதம்பரம் சிவகரன்(சிவா), செயலாளர் சிவநேசன் குவேனி, உபசெயலாளர் மணியழகன் சிவராசமலர், பொருளாளர் குணரட்ணம் சுதாகரன், போசகர் வைத்திலிங்கம் விக்னேஸ்வரன். (அ)

## கணித, விஞ்ஞான வள நிலையம் திறப்பு

தென்மராட்சி, பெப்.9

தென்மராட்சி கல்வி வலய கணித, விஞ்ஞான வள நிலையம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி கட்டடத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இந்த நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (த-117)

## செயலமர்வுகள்

தென்மராட்சி, பெப்.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் வாழ்க்கைத் தேர்ச்சி, நடனம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 11,12 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடம் 11ஆம் திகதியும், நடன பாடம் 11,12ஆம் திகதிகளிலும் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (த-117)

## கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று

யாழ்ப்பாணம், பெப்.9

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ள கனிஷ்ட பிரிவு தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கான வீரர்களைத் தெரிவு செய்யும் பயிற்சி முகாமும், யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டமும் இன்று மாலை 5 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

நிர்வாக சபை உறுப்பினர்களையும், வீர, வீராங்கனைகளையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் பிரசன்னா கேட்டுக்கொண்டுள்ளார். (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு பிளவுபடும் என்பதை எதிர்வு கூறியவர் அமரர் ஜீ.ஜீ.



ஜீ.ஜீ.பொன்னம்பலம்

அமரர் ஜீ.ஜீ அவர்களின் இன்றைய நினைவு தினத்தில் அரசியல் ரீதியாக தமிழ்த் தேசிய இனத்தின் நலனுக்காக அவர் ஆற்றிய செயல்களுள் சிலவற்றை ஞாபகப்படுத்துவது சாலப் பொருத்தம் என்று எண்ணுகின்றேன்.

சம பிரதிநிதித்துவ கோட்பாடு பற்றி அவர் ஆற்றிய உரையொன்றில் குறிப்பிட்டிருப்பதாவது :-

''இந்நாட்டு அரசியல் தொடுவானில் பாரிய வினாவாக நான் கருதுவது இதன் மீதான மாட்சிமை தாங்கிய மன்னரின் பரிந்துரைகள் குறித்து எனக்கிருந்த ஏமாற்ற உணர்வைச் சரியான வார்த்தைகொண்டு வர்ணிக்க முடியாதவனாய் இருக்கின்றேன். *உண்மையான ஜனநாயகம் ஒரு தலைப்பட்ச கட்டளையிடுதலால்* பேணப்படமுடியாது என்பதனையும் ஆளுகை செய்பவர்களின் வாத முறைசாரா ஆணைக்கூற்று ஆளப்படுபவர்களின் சம்மதத்தின் இடத்தை எடுக்க இயலாதென்பதையும் எவ்வகை வடிவத்திலான ஜனநாயக அரசாங்கமாக இருந்தாலும் அதற்கான முறையான உறுதித் தன்மையும் அத்திபாரமாய் இருப்பது ஆளப்படுபவர்களின் ஒப்புதலே என்பதையும் மேதகு தேசாதிபதி அவர்கள் அறிந்திருக்கவேண்டும். இறுதியாக ''இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகளும் கோரிக்கைகளும் உரிய கவனிப்புடன் கூடிய நியாயத்தை வழங்குங்கள்''

''இங்கிலாந்து தேசத்தின் நீதியில் ஆளப்பட்டு வரும் மக்களின் நம்பிக்கையும் விசுவாசமுமே'' இலங்கையைப் பொறுத்தவரையில் எமது நாடாளுமன்றத்தை இந்தச் சபையை - முரண்படுகின்ற , பகைமையைக் கொண்ட நலன்களின் தூதுவர்களாகக் கொண்ட ஒரு சபையாக அல்லாமல் , ஒட்டுமொத்தமான இலங்கையர்களின் நலன் ஒன்றையே தம் விருப்பமாகக் கொண்டு அதன் மூலம் உயிரூட்டப்பட்ட மக்களின் அனைத்துப் பிரிவி

## இன்று அவரது சிரார்த்த தினம்

னரதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய திட்டவட்டமான சபையாக ஆக்குமாறு பேரரசின் ஸ்தாபகர்களுக்கு உயிரூட்டிய உணர்வுகளுக்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.''

திரு.பொன்னம்பலம் சிங்கள மக்களுக்கு சிங்களம் எவ்வாறோ தமிழ் மக்களுக்கு தமிழ் அவ்வாறே என்ற கொள்கையையும் வற்புறுத்தி வந்தார். இந்தக் கொள்கையை இந்த நாட்டிலே அமுல்படுத்தி இருந்தால் இந்த நாட்டில் இன்றைய நிலை ஏற்பட்டிருக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தக் கொள்கையை ஏன் வற்புறுத்தினார் என்பதற்கு இன்று வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் பாசைப் பிரச்சினையால் படும் துன்பங்கள் சொல்லக்கூடியவை அல்ல, எண்ணிப் பார்க்கக் கூடியவையல்ல. இன்னுமொரு விடயத்தை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் நீதிமன்றங்களிலே ஒரு வழக்குத் தாக்கல் செய்வதென்றால் மொழி பெயர்ப்புக்கு ஏற்படும் செலவு சட்டத்தரணிகளிற்கு ஏற்படும் செலவுகளை விடக் கூடுதலாக ஏற்படுகின்றதை எனது அனுபவத்தில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

1956 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அமரர் ஜீ.ஜீ. ஆற்றிய உரையில் நாடு பிளவுபடும் என்பதை இதய சுத்தியுடன் வெளிப்படுத்தினார்.

''இச்சட்டம் நியாயமற்றதும் அநீதியானதும் மனித நேயமற்றதுமாக இருப்பதுடன் அதேசமயம் அதனுள் பொதியப் பெற்றுள்ள ஏற்பாடுகள் காரணமாக தமிழினமானது கலாசாரம், மொழி, பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியான சுதந்திரத்தை அரசியல் யாப்பு ரீதியாக அடையும் உரிமையை தெளிவாக உறுதிப்படுத்த மறுக்கும் இச்சட்டவாக்கம் கிஞ்சித்தும் திருப்தியளிக்காத சட்டமாகும்.

'இவ்விவாதத்தின் பரபரப்பு அடங்குகையில் இப்போது ஆரம்பித்துள்ள போராட்டத்தின் முடிவு கிடைத்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வரலாற்று ரீதியாக என்னதான் வேறுபாடுகள் எமக்கிடையே இருந்தாலும் கடந்த சில நூற்றாண்டு காலத்திலாவது இந்த நாட்டு விவகாரங்களைப் பொறுத்தமட்டில் ஐக்கிய தேசிய சகோதரத்துவப் பாங்கினை அபிவிருத்தி செய்து வந்த இரண்டு தொன்மையானதும் சமகாலப் பெருமை கொள்ளத்தக்க (இப்படிக் கூறுவதில் தப்பில்லை) துமான கலாசாரங்களைக் கொண்ட இரண்டு இன *மக்களிடையே பிளவொன்று ஏற்பட்டுள்ளதை மிகுந்த கவலையுடனும் மனவேதனையுடனும் முன்னறியக் கூடியதாக உள்ளதென்றும் மிகவும் இதயசுத்தியுடன் கூறுகின்றேன்.*

மதரீதியான துன்புறுத்தல்கள்கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால், மொழி ரீதியான உரிமை மறுப்புகள் சகித்துக்கொள்ளமுடியாதவையென்ற சிலரின் கருத்துகள் அங்கே இடம்பெறும் அளவுக்கு மொழியும் மொழி உரிமைகளும் மக்களை மிகவும் ஆழமாகவும் அடிப்படையாகவும் பயங்கரமாகவும் பாதிக்கின்றன. அதாவது, அந்தக் காலத்தில் ஒரு மதத்தைப் பின்பற்றுவர்கள் இன்னொரு மதத்தை பின்பற்றுபவர்கள் மீது தமது மதத்தை வாள்முனையில் வலிந்து திணிப்பதைச் சரியென்று நினைத்தார்கள். வரலாறும் அதை அறிவிற்கப்பாற்பட்டதும் காட்டுமிராண்டித்தனமாதுமென தீர்ப்பளித்தது. ஆயினும், கல்விமான்களும் ஆராய்சியாளர்களும் இது பற்றிக் கருத்துரைக்கையில் ''தமது மதமே முக்தி நிலையை அடைவதற்கான ஒரே வழி, ஆகவே அம்மதத்தின் கோட்பாடுகளை வாள்முனையில் வற்புறுத்தியாவது மனதில் பதிய வைப்பது ஓரளவு நியாயமானது.'' என்று சொல்வோர் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். ஆனால், இந்த நவநாகரிகயுகத்தில் ஒரு மொழியைப் பேசும் ஓர் இனம் மற்றொரு மொழியைப் பேசுகின்ற குழுவினரின் விருப்பமில்லாத தொண்டைகளுக்குள் தமது மொழியைப் பலவந்தமாக திணிக்க விரும்புவதில் என்ன நியாயம் இருக்கக் கூடும்?

'' படைகளினதும் அரச எந்திரத்தினதும் துணை கொண்டு ஓர் இனத்தின் மொழியை இன்னொரு இனத்தின் மீது பலவந்தமாகத் திணிப்பதிலும் பார்க்க அதிக இருள்மயமான மனச்சோர்வு மிக்க ஒரு விடயத்தை நாகரிகத்தின் வரலாறு பதிவு செய்யாது என மிகவும் பொறுப்புடனும் செயல் முனைப்புடனும் இதைக் கூற விரும்புகின்றேன். இராணுவப் படையெடுப்பை நடத்தி ஓரினத்தை வெற்றி கொண்டதன் பின்னர் வெல்லப்பட்டவர்கள் மீது, அவர்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ வென்றவர்கள் தம் மொழியை வாள் முனையில் பலவந்தமாகத் திணித்த வரலாற்றில் இடம்பெற்ற கடந்தகால சம்பவமொன்று மட்டுமே இதற்கு இணையாகும்.

''நேரிய உள்ளத்தோடு நான் அவர்களைக் கேட்கிறேன். இச்சட்டமூலத்தை இன்னும் அவர்கள் முன்னெடுக்கப் போகின்றார்

**கே.எம்.தர்மராஜா**

களா? அப்படியானால் சபாநாயகர் அவர்களே, எல்லோரும் இதைப் புரிந்து கொள்ளட்டும். இதனால் ஏற்படப் போகின்ற தவிர்க்க முடியாத விளைவுகளை முழுமையாக உணர்ந்து கொண்டே அவர்கள் இதைச் செய்கிறார்கள். பிற்காலத்தில் அவர்கள் சொல்லக் கூடாதது *''நாங்கள் இந்த நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்தும் போது தாங்கள் எடுத்த முயற்சிகள் குணப்படுத்த முடியாத அளவு ஆழமான வெடிப்பை விளைவிக்கக் கூடுமென்று அப்போது நாங்கள் நினைத்திருக்கவில்லை என்று''*


குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (சோடனையுடன்)
★ சுற்றுலா
★ விசேட வைபவங்கள்



போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
S.SRIRANGAN,
SRI PALM BEACH REST,
RAJA THEATRE COMPLEX,
JAFFNA.

0777 283595,
0777 222180,
0773 126744.

(47736)(32-15-45-42)


# குருநகர் மீன் வாடிக்குச் செல்லும் வியாபாரிகளுக்கு அசௌகரியம்

## படையினர் விதித்துள்ள புதிய பாதை ஒழுங்கினால்

குருநகர்,பெப்.9

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு அருகில் அமைந்துள்ள குருநகர் மீன்வாடிக்கு கடலுணவுகளைக் கொள்வனவு செய்ய நாளாந்தம் சென்றுவரும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் படையினரால் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய ஒழுங்குகளால் மிகுந்த அசௌகரியங்களை அனுபவித்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாடிக்குச் செல்லும் பொது மக்களது வாகனங்களை மீன் வாடியின் உட்புறம் கொண்டு செல்வதற்குப் படையினர் தடை விதித்திருக்கின்றனர்.

இதனால், இவர்கள் தமது வாகனங்களைக் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலைக்கு முன்னால் உள்ள வெறும் காணியில் நிறுத்திவிட்டு கடலுணவைக் கொள்வனவு செய்வதற்காக சுமார் 50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மீன்வாடிக்கு நடந்து போய்வர வேண்டியுள்ளது.

நாளாந்தம் இந்த மீன் வாடியில் கடலுணவுகளைக் கொள்வனவு செய்துவரும் வியாபாரிகள் தாம் பயணிக்கும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை அவர்களது கொள்வனவு செய்யும் சாதனங்களுடன் உள்ளே சென்று வர அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால், இம் மீன்வாடியில் உட்புறத்திருப்பத்திற்கு சமீபமாக வெளிப்புறத்தில் முட்கம்பிகள் கொண்ட வீதித் தடையை அமைத்து அதனூடாகவே சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்களையும் செலுத்தி வரவேண்டும் என்று இவ் மீன்வியாபாரிகளை படையினர் இப்போது பணித்துள்ளனர்.

கடலுணவைக் கொள்வனவு செய்து பாரத்துடன் அந்தத் தடையூடாக வெளி வருவதில் வியாபாரிகள் மிகுந்த உயிராபத்தையும் அசௌகரியத்தையும் அனுபவித்து வருவதை நாளாந்தம் இங்கு காணமுடிகிறது.

எனவே, இக்குறுகிய வீதித் தடையை அகற்றி சுலபமான போக்குவரத்தை இப்பகுதியில் படையினர் உருவாக்கி வழங்க வேண்டியது அவசியம் என்று வியாபாரிகளும் பொது மக்களும் சுட்டிக்காட்டுகின்றனர். (த-51)



உ
சிவமயம்

விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம்
தை மாதம் 28 ம் நாள் (10-02-2006) வெள்ளிக்கிழமை வளர்பிறை
திரியோதசி திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய
(புதியநேரம்) மு.ப. 9.15 மணி முதல் 10.45 மணிவரையுள்ள மீன இலக்கின
சுபமுகூர்த்தவேளையில்

அமரர் புலவர் கா. வேல்முருகன் (B.O.L)
திருமதி. வேல்முருகன் நாகேஸ்வரி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
சத்தியநாராயணன் (சத்தியன்)
அவர்களுக்கும்



திரு. திருமதி. புஷ்பதேவன் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
திருநிறைச் செல்வி
தாரணி
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் கொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால்
நிச்சயிக்கப்பட்டு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி (பேச்சி) அம்பாள்
அட்சய சுரபி ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள்
தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்து நடைபெறும்
விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திருமதி. வேல்முருகன் நாகேஸ்வரி
"வள்ளுவர் மனை"
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.
தொடர்பு:-
0777 279089
0777 917831

திரு. திருமதி. புஷ்பதேவன்
திருமதி இரகுநாதன், பிள்ளைகள்
58, பழம் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)



யா/மல்லாகம் மகாவித்தியாலயம்
மல்லாகம்

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2006

இடம்: பாடசாலை விளையாட்டு மைதானம்

காலம்: 2006.02.10 வெள்ளி பிற்பகல் 1.30 மணி



தலைவர்
திரு.மா.நாகேந்திரசீலன் (அதிபர்)
பிரதம விருந்தினர்
உயர்திரு ச.கைலாசநாதன் அவர்கள்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பழைக்கோட்டம்

அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

- பாடசாலைச் சமூகம்

(46566)(21-17-19-42)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மனச்சாட்சியை — உலுக்கியிருக்கும் ஹமாஸின் வெற்றி!



**விடுதலைப் புலிகளின் வானொலியான 'புலிகளின் குரல்' வானொலியில் கடந்த சனிக்கிழமை (04.02.2006) அரசியல் அரங்கம் பகுதியில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் இது.**

உலகையே மிகுந்த பரபரப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உள்ளாக்கி இருக்கக் கூடிய - உலகத்தைப் பாரிய இக்கட்டில் சிக்கிவிட்டிருக்கக் கூடிய - ஒரு மாற்றம் குறித்து உங்களோடு பேசுகிறோம்.

பலஸ்தீன அதிகார சபைக்கான தேர்தலில் ஹமாஸினது வெற்றிதான் இன்று மிக பரபரப்பாகப் பேசப்படுகிற செய்தியாக இருக்கிறது.

கடந்த மேமாதம் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் ஹமாஸ் இயக்கமானது மூன்றில் ஒரு பங்கு சபைகளைத் தன் வசம் கைப்பற்றிக் கொண்டது.

அப்போதே ஹமாஸின் எதிர்கால வெற்றி பற்றி எதிர் கூறப்பட்டாலும் ஹமாஸே எதிர்பார்க்காதது என்று அந்த இயக்கம் சொல்கின்றவகையில் பாரிய வெற்றி பெற்றிருக்கிறது.

பலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் 132 ஆசனங்களில் 80 ஆசனங்களைக் ஹமாஸ் கைப்பற்றியிருப்பது உலகத்தில் பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. எவரும் எதிர்பார்க்காத ஒரு மிகப் பெரிய கேள்விக் குறியை ஹமாஸ் எழுப்பியிருக்கிறது.

உலகத்தையே, குறிப்பாக ஆக்கிரமிப்பாளர்களை அவர்களது கடைசி ஆயுதங்களை - தந்திரோபாயங்களை - எல்லாம் மிகுந்த இக்கட்டுக்கும் சிக்கலுக்கும் உள்ளாக்கியிருக்கிற ஹமாஸின் வெற்றி குறித்து நாம் விரிவாக இன்று பேசுகிறோம்.

ஹமாஸ் இயக்கத்தின் வெற்றியானது முற்றிலுமாக ஒரு புதிய விழிப்புணர்வுள்ள அமைப்பை சர்வதேசத்துக்குள் பிரதிநிதித்துவம் செய்கிறது. குறிப்பாக மிகப் பழைய அமைப்பான - தாய் அமைப்பான - 'பத்தா' அமைப்பை மறுத்து - அதன் மூல உபாயத்தை முற்றாக மறுத்து - ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் ஹமாஸ் எழுந்திருக்கிறது.

இன்றைய அரபு உலகின் யதார்த்தமே ஹமாஸ் வெற்றிகளுக்கூடாக பிரதிபலிப்பதாக உலகம் கருதுகிறது. இந்தப் புதிய நிலைமைகளுக்கு ஏற்றவாறு உலகம் தன்னைத் தகவமைத்துக்கொள்ள வேண்டிய இக்கட்டு ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலில் வருகிற மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது. இஸ்ரேலில் வாக்களிக்க உள்ள மக்கள் கூட இன்று மிகுந்த இக்கட்டுக்குள் சிக்கியுள்ளனர். அப்படியான ஒரு நெருக்கடியை ஹமாஸின் இந்தவெற்றி ஏற்படுத்தியிருக்கிறது.

### ஹமாஸ் என்பதன் அர்த்தம்

ஹமாஸ் என்ற சொல்லின் கருத்து தீரமும் துணிவும் என்பதோடு இஸ்லாமியத் தேசியப் பற்றுணர்வைத் தாங்கிப் பிடித்தலை அந்தச் சொல் வெளிப்படுத்துகிறது.

ஹமாஸ் இயக்கத்தின் தோற்றம் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது.

1920களில் ஏற்பட்ட முஸ்லிம் சகோதரத்துவம் என்ற இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையில் ஹமாஸ் தோற்றம் பெற்றது.

அதனது விளைவாக 1987களில் காசா போன்ற இடங்களில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புகளின் கிளையாக இந்த ஹமாஸ் உருவெடுத்தது.

ஷேக் முகமது யாசின் மற்றும் முகமது அல் சகார் ஆகியோரால் இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு இஸ்ரேலிய குண்டு வீச்சினால் முகமது யாசின் கொல்லப்பட்டார். சகார் தலைமையில் வளர்ந்த ஹமாஸ், பலஸ்தீனத்தின் பிரதமராக இன்று கருதப்படுகின்ற இஸ்மாயில் ஹனியா என்பவர் மூலம் உலகில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது.

ஹமாஸின் எழுச்சித் திட்டம் மிகவும் வித்தியாசமானது. ஒரு தீவிரவாத இயக்கம் போல ஹமாஸ் தோற்றம் காட்டினாலும் கூட அவர்களுடைய நிர்வாகக் கட்டமைப்பு, மக்கள் பணிகள் என்பவை உலகத்தையே பெருத்த அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னால் அவர்களது நிர்வாகம் நடைபெற்ற விதம் அந்த மக்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை இன்று ஏற்படுத்தியிருக்கிறது. ஊழலற்ற, ஒழுங்கான, மக்கள் நலன் தழுவிய அவர்களது அற்புதமான திட்டங்கள், அடி மட்ட மக்களைக் கவனித்த விதங்கள், சாதாரண மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்கும் அவர்களது மணவாழ்க்கை, குழந்தைப்பேறு, மருத்துவ மனைகள், கல்விச்சாலைகள் எனப் பலவற்றுக்கூடாக சமூகத்தோடு இணைந்து அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். அதுதான் இன்றைக்கு அவர்களுக்குப் பெரிய வெற்றியை தேடித்தந்திருக்கிறது.

அரபாத் தலைமையிலான அல்பத்தா அமைப்பு கடந்த 10 ஆண்டுகளாக பலஸ்தீன அதிகார சபையின் நிர்வாகமானது, ஊழல்கள் நிறைந்து, மக்கள் நலனில் அக்கறையற்று குறிப் பிட்ட வர்த்தகத்தின் நலன்கள் மட்டும் பேணப்பட்ட ஓர் அமைப் பாக மாறியது.

அந்த அமைப்புக்கு மக்கள் எதிர்ப்புக் காட்டியதால் ஹமாஸ் வென்றுள்ளது. ஆகவே, ஹமாஸின் வெற்றி யானது புதிய தோற்றமாகக்கருதப் படுகிறது.

ஷேக் முகமது சாயின் தலைமையில் உருவான ஹமாஸ் இயக்கமானது முஸ்லிம் அடிப்படைச் சிந்தனைகளை மக்களிடத்தில் முன் வைத்து அரபாத்தின் பத்தாவுக்கு மாற்றாக இயங்கி வந்தது.

பேச்சுவார்த்தையை முற்றாக நிராகரித்து, இஸ்ரேலின் செயற்பாட்டை முற்றாக வெறுத்து 1948 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பலஸ்தீனத் தாயகத்தை மீட்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தது.

மத்திய கிழக்கிலிருந்து இஸ்ரேலின் ஜோர்டான் நதி வரை பரந்திருக்கக் கூடிய பலஸ்தீனத் தாயகத்தை - காசா மேற்குக் கரை, ஜெருசலேம் போன்றவற்றை உள்ளடக்கிய அந்தத் தாயகத்தை - அவர்கள் கனவாகக் கொண்டிருந்தார்கள்.

அதேபோல் ஒஸ்லோ உடன்பாடு, பலஸ்தீன அதிகார சபை ஆகியவற்றையும் ஹமாஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.

### ஹமாஸின் நிலைப்பாடு

இஸ்ரேலில் உள்ள அனைத்து மக்களும் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதுதான் ஹமாஸின் நிலைப்பாடு. ஏனெனில், அவர்கள் பலஸ்தீனத் தாயகத்தை ஆக்கிரமித்துள்ளனர் என்ற அடிப்படையில் ஹமாஸ் செயற்பட்டது. அந்த அமைப்பு ஒரு தீவிரமான அமைப்பாகத் தோற்றம் பெற்றது. அதனது நிதி மூலமும் உலகம் முழுமைக்கும் பரந்து விரிந்திருந்தது. தங்களது நிதியை நன்றாகக் கணக்கிட்டு மக்களுக்காக அவர்கள் பயன்படுத்தினார்கள்.

இந்த நிலைப்பாடு மிக அதிசயமான நிலைப்பாடு. 1980களில் அல்பத்தாவின் வளர்ச்சியைக்கண்டு மனம்பொறுக்காத இஸ்ரேலியர்கள் இதுபோன்ற தீவிரமான இயக்கத்திற்கு மறைமுகமான ஆதரவு கொடுத்தமையை நாம் அறிவோம்.

அல்பத்தாவின் மிதவாதப் போக்கையே சமாளிக்க முடி யாத இஸ்ரேலால் ஹமாஸின் இந்தத் தீவிரவாதத்தன்மை எப்படி எதிர்கொள்ளப்படும் என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

ஹமாஸின் தோற்றம் என்பது மத்திய கிழக்கில் ஓர்உண்மையான அமைதியைத் தேடிக்கொள்ள முடியாத இயலாமையை இன்று வெளிப்படுத்தியிருக்கிறது என்றுதான் கருதுகின்றார்கள்.

பத்தா அமைப்பின் அழிவு - தலைமையின் சீரழிவாகவும் கருதப்படும் நிலையில் ஹமாஸின் தோற்றமானது இன்று பல முக்கியமான கேள்விகளை எழுப்பியுள்ளது.

எந்த ஜனநாயக அமைப்பை நம்பி - எந்த அல்பத்தாவின் செயற்பாட்டை நம்பி - பலஸ்தீன அதிகார சபையைக் கொடுக்க உலகம் முன்வந்ததோ அதேசபையை அவர்கள் சொல்லுகிற ஜனநாயக வழிமுறைகளுக்கூடாகவே ஹமாஸ் கைப்பற்றியிருப்பது இந்த உலகத்துக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

பலஸ்தீன அதிகார சபையினது மிகப் பெரும் வருமானங்கள் அமெரிக்காவினாலும் ஐரோப்பாவாலும் வழங்கப்படுகின்றன.

வருடாந்தம் 400 மில்லியன் டொலரை அமெரிக்காவும் 300 மில்லியன் டொலரை ஐரோப்பிய ஒன்றியமும் இஸ்ரேலியத் தரப்பிலிருந்து வரிகள் என்கிற வகையிலுமாக பலஸ்தீன அதிகார சபை இயங்கியது.

இந்த நிதியை இன்று கொடுப்பார்களா? இல்லையா? என்கிற கேள்வி எழுந்துள்ளது. அப்படி அளிக்காது விட்டால் முழு பலஸ்தீன மக்களையும் பழிவாங்கியதாகும். இப்படியான மிகப் பெரிய இக்கட்டில் சிக்கியிருக்கிற உலகம் என்ன முடிவை மேற்கொள்ளப் போகிறது என்பதை அனைவரும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏனெனில், ஹமாஸின் இந்த வெற்றியானது உலக நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தைப் புகுத்தியுள்ளது.

பயங்கரவாத இயக்கம் - தீவிரவாத இயக்கம் - மக்கள் நலன் விரும்பாத இயக்கம் - மக்களிடமிருந்து அந்நியப்பட்ட இயக்கம் என்று எந்த இயக்கத்தைச் சொல்கின்றார்களோ அந்த இயக்கம் மக்களினது ஏகோபித்த ஆதரவோடு தெரிவுசெய்யப்படுகிறபோது அவர்களது எல்லாக் கணக்கீடுகளும் எதிர்வுகூறல்களும் தவறாகிப் போகின்றன. இதனால், உலகம் இன்று திக்கித் திணறி நிற்கிறது.

### பலஸ்தீன அதிகார சபை எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை

இந்த நிலையையே தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் உலகம் எதிர்கொள்கிறது என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகின்றோம். 40 ஆண்டு கால அடிமை வாழ்வு - ஏறத்தாழ 20 ஆண்டு கால அல்பத்தாவின் பேச்சு மற்றும் கடைசிப் 10 ஆண்டு கால பலஸ்தீன அதிகாரசபை பலஸ்தீன மக்களுக்கு எதையுமே பெற்றுக்கொடுக்கவில்லை என்பதை இன்று ஹமாஸின் வெற்றி மூலம் உலகமே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



பலஸ்தீனப் பிரதமராகத் தெரிவுசெய்யப்படவுள்ள இஸ்மாயில் ஹனியா

உலகம் முன்வைத்த இவற்றுக்கு மாற்றாக - ஹமாஸ் முன்வைத்த தீவிரவாதத் தன்மைக்கு அப்பால் - ஹமாஸ் அண்மைக்காலமாகப் பாரிய முதிர்ச்சியைக் காட்டிக் கொண்டு வருகிறது.

கடந்த மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னால், ஹமாஸ் தன்னுடைய நிர்வாகத்தை நடத்திய விதம், பலஸ்தீனிய மக்களோடு தன் உறவை அது பேணிய விதம், பலஸ்தீனத்தில் சமய சார்பற்ற முறையில் அது செயற்பட்ட தன்மை, இஸ்ரேலியத் தலைவர்களோடு தொடர்புகளைப் பேணியவிதம் எனப் பலவகைகளில் ஹமாஸ் ஒரு முதிர்ச்சியான இயக்கமாகத் தென்படுகிறது.

## ஓர் இனத்தின் விடுதலையை ஒரு சில நாடுகளால் தடுக்கமுடியாது

அடுத்த பலஸ்தீனப் பிரதமராக வரப்போகின்ற இஸ்மாயில் ஹனியா அண்மையில் "நாங்கள் முதிர்ச்சியான இயக்கம். நாங்கள் வெறுமனே பலஸ்தீன மக்களோடு நிற்கவில்லை. மத்திய கிழக்கின் அரபு உலக மக்களோடு நாங்கள் நிற்கிறோம். அந்த மக்களினது கருத்துகளை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம். அதுபோல சர்வதேசத்தின் கருத்துகளையும் கவனத்தில் கொள்ளத் தயாராக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

இப்படியான ஒரு மென்மைப் போக்கை ஹமாஸ் வெளிப்படுத்தியிருப்பது ஒரு நல்ல அறிகுறி என்று அனைவரும் கருதுகின்றனர்.

இத்தகைய நிலையில் உலகமும் அதனது எடுபிடியான இஸ்ரேலும் என்ன முடிவை எடுக்கப்போகின்றன என்பது இன்று மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

இந்தக் கேள்விக்கான பதிலைக் காண்பது உலகத்துக்கு ஒரு மிகப் பெரிய சிக்கலாக மாறி இருக்கிறது.

ஓர் இனத்தினது விடுதலையை ஒரு சில நாடுகள் எவ்வாறு தடுக்க முடியும்?

அல்லது- ஓர் இனத்தினது தீர்ப்பை- கருத்தை எவ்வாறு மறுதலிக்க முடியும்?

என்று எழும்புகிற குரலினை தமிழீழ மக்களா கிய நாங்களும் பிரதிபலிக்கிறோம்.

எல்லா வகையிலும் பலவீனப்பட்ட பலஸ்தீன விடு தலை இயக்கம்,

ஓரடி நிலத்தைக் கூட மீட்க முடியாத அந்த இயக்கம் -

தொடர்ந்து போராடக் கூடிய வழிமுறைகளுக்கு ஊடாகவும் -

தவறிழைத்தோரிடமிருந்து விலகி புதிய அமைப்பைக் கட்டிச் செயற்படுதல் என்ற வகையில் -

பலஸ்தீன மக்களின் யதார்த்த நிலைமையைப் பிரதிபலிக்கக் கூடிய தலைமையைத் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்கிறார்கள்.

அந்தத் தலைமையை இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றோ அல்லது வேறு வகையிலோ குறிப்பிட்டாலும் கூட இப்படியான தோற்றப்பாடுகளுக்கு உலகம் ஒரு காரணம் என்பதை ஏற்க வேண்டிய நிலை இருக்கிறது.

இஸ்லாமியத் தீவிரவாதம் தோன்றுவதற்கு யார் காரணம்?

பனிப்போராக் கால கட்டத்தில் தலிபான்களின் தோற்றத்துக்கு வித்திட்டது அல்லது பின்லேடனின் தோற்றத்துக்கு வித்திட்டது யார் என்பது உலகத்துக்கு நன்றாகத் தெரியும்.

அதேபோல் 1980 களில் இந்தத் தீவிரவாத இயக்கங்களைக் கண்டும் காணாதது போல் செயற்பட்டதாக அப்போது பத்தா அமைப்பு குற்றஞ்சாட்டியது எங்களுக்கு நினைவுக்கு வருகிறது.

இந்தியாவின் பிந்தரன்வாலேயைக் கொண்டு காலிஸ்தான் விடுதலை இயக்கத்தை இங்கிலாந்து உருவாக்கியமை போல் இஸ்ரேலின் உளவுத் துறையினரும் செயற்பட்டனர்.

இவ்வாறான உத்திகளைக் கடைப்பிடித்து எல்லாவற்றையும் மீறி நாட்டுப்பற்றோடும் மிகத் தெளிவான பார்வையோடும் ஓர் இயக்கம் செயற்படும் போது அந்த இயக்கம் மக்களினது முழுமையான ஆதரவைப் பெற முடியும் என்பது பலஸ்தீன வரலாற்றின் விளைபொருளாக உலகத்துக்கு வந்திருக்கிறது.

போராட்ட அமைப்புகளுக்குக் கூட இந்தச் செய்தியானது வித்தியாசமான பரிணாமத்திலே வந்து சேருகிறது.

பலஸ்தீனத்தினது தீர்வை நோக்கிய இந்தப் பயணத்தில் ஹமாஸினது பங்களிப்பு எவ்வாறு கருதப்படப்போகின்றது?

ஹமாஸின் வெற்றி மூலம் முழு பலஸ்தீன மக்களை பழிவாங்கக் கூடிய - முற்றிலுமாக ஓர் ஒதுக்கப்பட்ட கூட்டமாகக் கருதக் கூடிய நிலைக்கு இட்டுச் செல்லுமா?

அல்லது - ஒரு புதிய பரிணாமத்தை உலகம் உணர்ந்து தன் போக்கை மாற்றி ஹமாஸும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து இறங்கி இரு தரப்பினரும் சந்திக்கிற வாய்ப்புக்கூடாக இனிவரும் நாள்களில் பலஸ்தீன மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்குமா? என்பதுதான் இந்த வெற்றிக்கூடாக எழுந்து நிற்கிறது.

ஹமாஸின் வெற்றி என்பது அடிப்படையில் ஒரு தர்க்க ரீதியாக நிகழ்ந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

50 வருட அமைதி முயற்சிக்கூடாக -

50 விழுக்காடு பலஸ்தீன மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழுகின்ற -

28 அல்லது 29 விழுக்காடு மக்கள் வேலையற்று இருக்கிற நிலையில் -

பலஸ்தீன மக்களுடைய எதிர்காலம் குறித்த கையோடு இப்போது ஹமாஸ் வெளிவந்து நிற்கிறது.

இஸ்ரேலிய அரசை முற்றாக அழித்தல், அமைதி உடன்பாட்டை முற்றாக ஏற்றுக்கொள்ள மறுத்தல் என்கிற தன்னுடைய கோட்பாடுகளில் ஹமாஸ் எந்த அளவுக்கு விட்டுக் கொடுத்துச் செயற்படப் போகிறது என்பது காலப்போக்கில் தெரியவரும்.

அதேபோல், நிலைமையை உணர்ந்து உலகம் தனது நிலையை மாற்றிக்கொள்ளுமா? கொள்ளாதா? என்பதும் ஒரு முக்கியமான கேள்வியாக மாறி இருக்கிறது. ஹமாஸின் வெற்றியானது உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கியிருக்கிறது.

### உலகத்தை நோக்கி எதிரொலிக்கும் கேள்வி

மத்திய கிழக்கின் இந்த நிலைமைகளைப் பார்க்கும் போது, தென்னாசியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்கும் உலகத்துக்கு முன்னால் பெருத்த கேள்வியை எழுப்பி நிற்கிறது.

மத்திய கிழக்கின் மூலை முடுக்கெல்லாம் உலகத்தை நோக்கி எதிரொலிக்கின்ற இந்தக் கேள்விகள் எமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னால் ஹமாஸ் இயக்கம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடாவில் தடைசெய்யப்பட்டது. அதனுடைய நிதி மூலங்களான தொண்டர் அமைப்புகளும் சர்வதேசமெங்கும் தடை செய்யப்பட்டமையும் அவர்களது வங்கிக் கணக்குகள் நிறுத்தப்பட்ட வரலாற்றையும் நாம் அறிவோம்.

அதே ஹமாஸ் இயக்கம்தான் இன்று பலஸ்தீன அரசைப் பொறுப்பேற்கப் போகிறது. அப்படிப் பொறுப்பேற்கின்ற போது ஹமாஸ் மீதான தடையை இவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? நிதிகள் வழங்கப் போகிறார்களா? இல்லையா?

எமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களைப் பார்க்கும் போது நிச்சயமாக உலக நாடுகள் தங்கள் நிலைப்பாடுகளிலிருந்து கீழிறங்கி இந்த அரசை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படும் என்பதாகத் தான் கூறப்படுகின்றது.

மக்களது கருத்துக்கு மாண்பு கொடுத்து - மதிப்புக் கொடுத்து செயற்பட வேண்டிய ஒரு நிலை இருப்பதை தமிழீழ மக்கள் தங்களது செயற்பாடுகள் மூலம் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கும் இந்த நிலையில் நாங்கள் இதை பெருமதிப்பிற்குரிய விடயமாகக் கருதுகிறோம்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல் சம்பந்தமான நோய்கள் அதிகம்

## தமிழீழ சுகாதாரப் பிரிவினர் விழிப்புணர்வு நடவடிக்கை

வட்டக்கச்சி,பெப்.9

தமிழீழ சுகாதார சேவையினர் இந்த மாதத்தைப் பற்சுகாதார விழிப்புணர்வு மாத மாகப் பிரகடனப்படுத்தி பல் சம்பந்தமான நோய்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப் பெரும்பாலானவர்களிடையே பற்களில் பாதிப்பு அதிகரித்துள்ளமை இனங்காணப் பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இம் மாதம் பற் சுகாதார விழிப்புணர்வு மாதமாகப் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளதாகவும்-

இக்காலப்பகுதியில் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை களில் தமிழீழ சுகாதார சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாட சாலைகள், முன்பள்ளிகள், சிறுவர், முதி யோர் இல்லங்கள் எனப் பல்வேறு மாவட் டங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத் தப்பட்டு வருகின்றன.

(த-352-405-203)



உடையார்கட்டு குரவில் தமிழ்வித்தியாலயத்தில் அண்மையில் தரம் 10 வகுப்பு புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் புதிய வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: மு.விக்னேஸ்வரன்)

## பூநகரியில் இன்று பற்சுகாதாரக் கருத்தரங்கு

வெள்ளாங்குளம்,பெப்.9

தமிழீழ சுகாதார சேவையினரால் இம் மாதம் பற்சுகாதார மாதமாகப் பிரகடனப்படுத் தப்பட்டமையையடுத்து பூநகரிப் பிரதேசத் தில் பல்வேறு இடங்களில் பற்சுகாதாரக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

கருத்தரங்குகள் இடம்பெறவுள்ள இடங் களின் விவரம் வருமாறு:-

✱ இன்று காலை 9மணிக்கு வேரவில் பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு - வேரவில் வைத்தியசாலைப் பொதுநோக்கு மண்டபத்திலும் முற்பகல் 10 மணிக்கு முழங் காவில் பாடசாலை மாணவர்களுக்கான கருத் தரங்கு- நாச்சிக்குடா இரணை மாதாநகரி லும், பூநகரிப்பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கு பிற்பகல் பூநகரி வைத்தியசாலை யிலும் நடைபெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட இடங்களில் கருத்தரங்கு கள் முடிவடைந்ததும் பற்சிகிச்சையும் பல் விழிப்புணர்வு தொடர்பான வீடியோப் படக் காட்சியும் காண்பிக்கப்படவுள்ளது.

(த-415-203)

## கண்டாவளை மக்களும் தற்காப்புப் பயிற்சி

பரந்தன்,பெப்.9

கண்டாவளைப் பிரதேச மக்களுக்கான தற்காப்புப்பயிற்சிகள் அண்மையில் முரசு மோட்டை கோரக்கண்கட்டு கிராமத்திலுள்ள விளைபூமி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் பரந்தன் பிரதேச போர்ப் பயிற் சிக்குழு இணைப்பாளர் சீ.விக்ரர்மான், தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, ஊரக மேம்பாட்டுப் பேரவையின் பரந்தன் பிரதேசத் தலைவர் சி.ஜெகநாதன், செயலா ளர் க.சபேசன், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி உட் படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த தற்காப்புப் பயிற்சியில் முரசு மோட்டை , ஊரியான், கோரக்கண்கட்டு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொது அமைப்பு களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (த-353-203)

## பேராறுக் கிராமத்தில் புனரமைப்புப் பணிகள்

ஒட்டுசுட்டான்,பெப்.9

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட் பட்ட பேராறுக் கிராமத்தில் டி.ஆர்.சி.நிறுவ னத்தின் புனரமைப்புப் பணிகள் பூர்த்திய டையும் நிலையில் உள்ளன.

மிக நீண்ட காலமாக இக்கிராமத்தின் வீதி கள் புனரமைக்கப்படாது இருந்தன. பொதுக் கிணறும் ஏனைய அடிப்படை வசதிகளும் கிராமத்தில் இருக்கவில்லை.

தற்போது, கிராமம் புனரமைப்புச் செய் யப்பட்டுள்ளது. (த-314-202)

## சுகநல மேம்பாடு குறித்த தெருநாடகம்

வட்டக்கச்சி,பெப்.9

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினர் மக்கள் சுகநல மேம்பாட்டு அறிவூட்டல் தொடர் பான தெருநாடகம் ஒன்றைப் பல்வேறு இடங் களிலும் நடத்தி வருகின்றனர்.

'வேள்ட் விஷன்' நிறுவனத்தினருடன் இணைந்து இந்தத்தெருநாடகம் நடத்தப்படு கிறது. இந்த நாடகம் நாளை 10 ஆம் திகதிவரை நடத்தப்படவிருப்பதாக நலவாழ்வு அபிவி ருத்தி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வு கடந்த 2ஆம் திகதி முதல் ஒவ்வொரு பிரதேசங்களிலும் நடைபெற்று வருகிறது.

இன்று 9ஆம் திகதி பூநகரி வைத்திய சாலை, பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவ மனை, ஆலங்கேணி ஆகிய இடங்களிலும் நாளை 10ஆம் திகதி முட்கொம்பன், சாழிப்புலம், பள்ளிக்குடா ஆகிய இடங்களிலும் நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தெருநாடகத்தின் முடிவில் சுகாதார விழிப் புணர்வு தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (த-405-203)

## ஒட்டு சுட்டானில் சிறுவர் பராமரிப்பு நிலையம்

ஒட்டுசுட்டான்,பெப்.9

ஜப்பான் ரெக் நிறுவனத்தின் நிதியுதவி யுடனும் முல்லை ரெக் நிறுவனத்தின் அனு சரணையுடனும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கான கட்ட டம் அமைக்கப்பட்டு வருகின்றது.

கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலை யில் உள்ளதால் வெகுவிரைவில் நிலையம் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (த-341-202)



ஊரியான், கோரக்கன் கட்டு, முரசுமோட்டை கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி விளைபூமி விளையாட்டரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. (படம்: மு.கந்தசாமி)

# சுதேச மருத்துவர்களின் விவரங்கள் சுகாதாரப் பிரிவினரால் சேகரிப்பு

கிளிநொச்சி,பெப்.9

தமிழீழப் பிரதேசத்தில் தொழில்புரியும் பாரம்பரிய சுதேச மருத்துவர்களில் இது வரை மருத்துவ சபையில் பதிவுசெய்யாத வர்களின் விவரங்களைத் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகம் சேகரித்து வரு கின்றது.

பாரம்பரிய சுதேச மருத்துவத்தை மேம் படுத்துவதற்கும் அவர்களிடமுள்ள ஓலைச் சுவடிகள், கையேட்டுப் பிரதிகள் ஆகியவற் றைப் பாதுகாத்து ஆவணப்படுத்தும் நடவடிக் கைக்காகவும் இந்த விவரங்கள் சேரிக்கப் படுகின்றன.

ஓலைச் சுவடிகளை அச்சேற்றுவதற்கென சுவடிகளைக் கையளிப்பவர்களுக்கும், மருத் துவத் தொழிலை மேற்கொள்ளாது தம்மிடம் வைத்திருக்கும் சுவடிகளையும் கையேட் டுப் பிரதிகளைக் கையளிப்பவர்களுக்கும் உரிய சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் பொறுப்பாளர் சுதேச மருத்துவப் பிரிவு, தமிழீழ சுகாதார சேவைகள், நடுவப் பணியகம், முதன்மைச்சாலை, கிளி நொச்சி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (த-202)




# முல்லை. மாவட்டப் பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள் அமையும்

புதுக்குடியிருப்பு,பெப்.9

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் சுகாதாரக் கழகங்கள் அமைக்கப்படவுள்ள தாக பிரதி சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த மாவட்டத்திலுள்ள சுகாதாரக் குறை பாடுகளை நிவர்த்திசெய்யும் நோக்குடன் இவை அமைக்கப்படவுள்ளன.

'வேள்ட் விசன்' நிறுவனத்தின் அனுசர ணையுடன் சுமார் 28 பாடசாலைகளில் இந் தக் கழகங்கள் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பின்னடைவுகளை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் தனிநபர் சுகாதாரம் மற்றும் சுகாதார விழிப்புணர்வு என்பவற்றை மாணவர்கள் ஊடாக முன்னெடுக்கும் நோக்குடனும் இந்தச் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

(த-353-203)

# நெடுங்கேணி மருத்துவ மனைக்கு ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்

புளியங்குளம்,பெப்.9

வவுனியா வடக்கு, நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனைக்கு இவ்வருடம் முதல் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய கலாநிதி ஜெயபாலன் என்ப வரே இவ் வைத்தியசாலைக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வருடத்தில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு வைத்தியர்கள் வீதம் சுழற்சி முறையில் இங்கு வந்து கடமையாற்றி வந்தனர்.

தற்போது வைத்தியர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த மருத்துவமனையில் உதவி வைத்தியர்கள், மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், தாதியர்கள் உட்பட 34 பேருக்கு வெற்றிடமுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (த-6-355)

# நீண்டகாலம் திருத்தப்படாத மருதங்கேணி - சுண்டிக்குளம் வீதி

தாளையடி,பெப்.9

மருதங்கேணி - சுண்டிக்குளம் பிரதான வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் பிரயாணிகள் பெருஞ்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மருதங்கேணி பிரதேசத்துக்குட்பட்ட 10 இற்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ் வீதிகளில் நாளாந்தம் பயணிக்கின்றனர்.

வீதி புனரமைப்பின்றி உள்ளதால் பயணம் செய்வதில் பெரும் அசௌகரியங்களைப் பயணிகள் அனுபவித்து வருகின்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இவ் வீதி மேலும் மோசமாகச் சேதமடைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, சம்பந்தப் பட்டோர் இதனைக் கவனத்தில் எடுத்துச் செயற் படவேண்டும் எனக் கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ரி-202)



கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த மாதம் 25ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றன. போட்டியில் பங்குபற்றிய உடற்கல்வி அணியினரைப் படத்தில் காணலாம். (படம்: பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 14ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 04 - 05 - 1915

விண்ணில் 17 - 01 - 1992



### அமரர் P.M. இராசரத்தினம்

(முன்னாள் காணிப்பதிவாளரும், மேலதிக மாகாணப் பதிவாளரும்)

திதி: தைமாத பூர்வபக்க துவாதசி (09-02-2006)

*''மனிதன் உலகிற் பிறந்து சாகும் வரை அங்கு வாழ்கிறான். இறந்த உடலுடன் எந்த நேரமோ, அல்லது எந்த இடத்திலோ மீண்டும் தொடர்பு படமுடியாது ஆனால் இறப்பின் பின் இரண்டு வழிகளில் ஒருவர் தொடர்பு கொள்ளலாம். ஒருவர் உயிரோடு இருக்கும் போது செய்த நல்ல செயல்கள் அல்லது அவர் வாழ்க்கையில் செய்த இழிவான காரியங்கள் மூலம் தொடர்பு கொள்ளலாம்'' உங்கள் வழி எந்த வழி?*

*- ஸ்ரீ சத்திய சாயி பாபா-*

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
திருமதி.மகேஸ்வரி இராசரத்தினம் (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (46557)(26.45.15)

## House for Rent

House Available at Jaffna Nallur - Temple Road with six Rooms, two Large Halls, Large Varandah Kitchen room, store room attached Bathrooms Car Garage Vehicle Parking facilities. Ideal for NGOs.

Contact T.P. 0779226056 (46496)

## நீர்கொழும்பில் கலேபரம்

சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் நிறுவனக் கட்டடத் தொகுதியொன்றை அகற்றக் கோரி நேற்றுக்காலை நீர்கொழும்பு நகரில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையினால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலீஸார் தடியடிப் பிரயோகத்தையும், கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

நீர்கொழும்பு பிரதான வீதியிலுள்ள கடைகள் சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்டுள்ளன எனவும், அவை நகரிலுள்ள தேவாலயமொன்றிற்குச் சொந்தமான காணியிலே கட்டப்பட்டுள்ளதால் அவற்றை அகற்றுமாறு தெரிவித்தும் நீதிமன்ற வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்பினையடுத்து ஒன்றுதிரண்ட நூற்றுக் கணக்கான மக்கள் பிரதான வீதியிலுள்ள கடைகளை அகற்றுவதற்கான பலவந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. மக்கள் கூட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலீஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும், கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டும் நடவடிக்கை எடுத்தனர். (க)

## வேலணைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட புங்குடுதீவு உப அலுவலகப் பகுதியில் நாளையும் நாளைமறுதினமும் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் அவற்றைக் கட்டி வளர்க்குமாறு வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் கேட்டுள்ளார்.

கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பது தொடர்பாக ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பிரதேசத்தில் மட்டும் 350 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்று புங்குடுதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பார்த்தீபன் தெரிவித்தார். (த-185)


## துளிருட்டிய நவீன CAR வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45778)(26.19.11)


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நன்றி நவிலலும்

தோற்றம் 24 - 06 - 1946

மறைவு 12 - 01 - 2006



### அமரர் சின்னத்தம்பி நடராசா

(ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்)

கொடிகாமம், கச்சாய்வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா அவர்கள் 12.01.2006 அன்று இறைவனடி எய்திய செய்தியை அறிந்து அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம், கண்ணீர் அஞ்சலிகள் மூலமும் மலர்வளையங்கள் வைத்தும் அனுதாபங்களைத் தெரிவித்தும் எமது துக்கத்தில் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை [10.02.2006] வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம். மனைவி, பிள்ளைகள்.

## கெபித் திருநாள்

குருநகர்,பெப்.9

ஊர்காவற்றுறை கிழக்கு வீதியில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலய வளவில் அமைந்துள்ள லூர்து அன்னையின் கெபித் திருநாள் திருப்பலி எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை வண. பிதா ஜேமிஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-51)

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளன.


வேத பாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, திருநீற்றுப் பதிகம், பஜனை, சொற்பொழிவு என்பன இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும். (ஐ)

## நீங்காத 13ஆம் ஆண்டு நினைவலைகள்

### இ.சண்முகம் பேரம்பலம்

*திதி: 09.02.2006 வியாழன்*

*ஸ்தாபகர்* E.S.P.Co



காரைநகர் வாரிவளவில் தோன்றி
யாழ் பாடும் நகரில் தொழில் செய்து வாழ்ந்த ஐயாவே!
E.S.P என்னும் மூன்றெழுத்து நாமத்தை
வாரிவளவு கற்பக விநாயகர் அருள் உடன்
முக்காடு போர்த்து வளர்த்து எமக்களித்த ஐயாவே!
நின் தொழில் இன்று பெருக்கெடுத்த போதும்
பெருமை ''ல்லாப் பெயருடன் நின் முகம்
மனதில் கண்டு உள்ளமுருகுதையா!
கய+முகன் தனில் நின் பெயருடன் - எம்
சேவைகள் ஊற்றெடுத்துப் பாய்வது - போல்
எம்மனதில் கவிபாடுகின்றதையா
ஆண்டுகள் பதின்மூன்றானாலும்
தங்கள் நினைவில் எங்கள் நல்வாழ்வு
கண்டு துதித்தி செய்து வணங்குகின்றோம் ஐயாவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

''மணி ஓசை''
கோயில் வீதி,நல்லூர். (46540) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவாக

அன்னை மடியில் 01 - 07 - 1943

அம்பாள் அடியில் 10 - 01 - 2006



வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

### திருமதி சரோஜினிதேவி சிவனடியான்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)*

(திதி: 09 . 02 . 2006 - வியாழக்கிழமை)

எங்கள் அன்பின் திருவுருவே!
அணையா ஒளிவீசும் மணிவிளக்கே!
இறைபக்திக்கும் பாசத்திற்கும் இலக்கணமாய்
வாழ்ந்த ஆருயிர் நாயகியே! அம்மாவே! அக்காவே!
கணப்பொழுதில் பிரிந்தீரே! எம்மை விட்டுப் பிரிந்த நிலையினை
எண்ண முடியவில்லையே! என்ன நடந்ததென்று ஏங்கித் தவித்து
தேம்பியழும் விழிகளுங்கள் உருவத்தைத் தேடுகின்றனவே!
அன்னையே ஒரு மாதமல்ல இதுபோல் பல நூறு மாதங்கள்
சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாதம்மா! நீ
எங்களுடன் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறாயம்மா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் இதயத்தெய்வத்தின் பிரிவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் தொலைபேசியிலும் தந்தி, தபால் மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் மரணச்சடங்கின் பொழுது கலந்து கொண்டு எங்கள் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது துயர் மத்தியிலும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு 09.02.2006 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்.
*இ. சிவனடியான்(கணவர்),பொ.பரராசசேகரம்.(பட்டய நில அளவையாளர்)*
*Dr.பொ.செல்வி கலாநிதிதேவி(பிரதம வைத்திய அதிகாரி,யாழ்மாநகரசபை)*

"பொற்றாமரை" வேலணை கிழக்கு, வேலணை - 02.

## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 - 07 - 1959

ஆண்டவன் அடியில் 25 - 01 - 2002



### அமரர் நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்

*திதி: 09-02-2006*

*பாசமிகு அண்ணாவே!*
*நீங்கள் எமை விட்டுப் பிரிந்து*
*நான்கு ஆண்டுகள் சென்றுவிட்டது - ஆனால்*
*நீங்காமல் உங்கள் நினைவலைகளால்*
*தினம் தினம் அழுகின்றோம்*
*நினைவுகளை மறந்து சற்று*
*நிம்மதி அடையக் கூட ஆறுதல் இல்லை எமக்கு*

தகவல்:
-குடும்பத்தினர்.

சுன்னாகம். (46558)(26.45.15)


## IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 12.02.2006
பிரிவு II : 14.02.2006
காலை 10.00 மணி

| கற்கைநெறி | பயிற்சிக்கட்டணம்: முழுமையான கட்டணம் | பயிற்சிக்கட்டணம்: சலுகைக் கட்டணம் |
|---|---|---|
| Dip. in Microsoft Office | ~~3000.00~~ | 500.00 |
| Dip. in Desk Top Publishing | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Internet Technology | ~~4000.00~~ | 500.00 |
| Dip. in Hardware Eng. | ~~5000.00~~ | 1500.00 |

GIT A/L மாணவர்களுக்கானது

GIT பாடத்திட்டத்திற்கான கற்கைநெறிகள் அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பமாகவுள்ளன

இணைந்து கொள்ளவிரும்பும் மாணவர்கள் 12.02.2006 முதல் பதிவுகளை மேற்கொள்ளலாம்

Head Office : # 410, K.K.S. Road, Jaffna.
T.P. No. : 021 222 8232

Branches : • NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரக்கக் கைதட்டுவதில் 60 வயது சீன முதியவர் கின்னஸ் சாதனை

பெய்ஜிங்,பெப்.9

உரக்க கைதட்டுவதில் கின்னஸ் சாதனை படைத்துள்ளார் சீனாவைச் சேர்ந்த 60 வயது முதியவர் மா ஹாங்லீ.

இதுவரை பிரிட்டனைச் சேர்ந்த பெண்மணி, 73 டெசிபல் (சத்தத்தை அளவிடும் அலகு) அளவுக்கு உரக்கக் கைதட்டியதுதான் கின்னஸ் சாதனையாக இருந்துவந்தது. அதை விஞ்சிவிட்டார் மா ஹாங்லீ. அவர் கைதட்டியபோது எழுந்த ஒலியின் அளவு 97.7 டெசிபல் ஆகும்.

வட கிழக்கு சீனாவின் லியாவோனிங் மாகாணத்தில் கட்டடத் தொழிலாளியாக அவர் பணியாற்றிவந்தார். அப்போது ஏற்பட்ட ஒரு விபத்தில் அவரது முதுகு எலும்பு சேதமடைந்தது. அதையடுத்து, 'மசாஜ்' செய்பவராகப் பணியாற்றி வருகிறார் அவர்.

சாதனை படைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், 1991 இல் இருந்து தினமும் ஒரு மணி நேரம் கைதட்டும் பயிற்சியை மேற்கொண்டார் அவர். இப்போது கின்னஸ் சாதனையைப் படைத்துவிட்டார். இத் தகவலை சீன செய்தி நிறுவனமான 'ஸின்ஹுவா' திங்கட்கிழமை தெரிவித்தது. (ஐ)

# உலக முஸ்லிம்கள் அமைதி காக்க வேண்டும் ஐ.நாவும் ஐரோப்பிய ஒன்றியமும் கோரிக்கை

லண்டன்,பெப்.9

நபிகள் நாயகம் (சல்) தொடர்பாக கேலிச் சித்திர வெளியீட்டினால் கொதிப்படைந்துள்ள இஸ்லாமியர்களை அமைதியாக இருக்கும் படி உலகத் தலைவர்கள் பலர் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஐ.நா.சபை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஓர் இஸ்லாமிய அமைப்பு ஆகியவற்றின் தலைவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கேலிச்சித்திரம் வெளியிடப்பட்டமையைக் கண்டித்திருப்பதுடன் உலக இஸ்லாமியர்களை அமைதிகொள்ளும்படியும் கேட்டுள்ளனர்.

ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானும் ஏனைய தலைவர்களும் கேலிச் சித்திரங்கள் ஆத்திரமூட்டுவதாய் இருந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளதுடன் அதன் காரணமாக உலகம் முழுவதும் வன்முறை எதிர் விளைவுகள் உருவாகியுள்ளமையைக் குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர்.

கேலிச் சித்திரங்கள் முதன்முதலாக வெளியிடப்பட்ட டென்மார்க் நாட்டின் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், 'இது உலக நெருக்கடி ஒன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது' என்று கூறினார். இஸ்லாமியர்கள் உலகம் முழுவதும் நடத்தியுள்ள ஆர்ப்பாட்ட வன்முறைகள் காரணமாக பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானிலேயே அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் 12 கேலிச்சித்திரங்களாக வெளியிடவிருந்த ஒரு பிரசுர அமைப்பிற்கு எதிராக தீர்ப்பு ஒன்றை வழங்கும்படி தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றை சட்ட நுட்ப காரணங்களுக்காக நீதிமன்றம் ஒன்று தள்ளுபடி செய்தது.

ஐ.நா.- ஐரோப்பிய ஒன்றியம் ஒரு இஸ்லாமிய ஸ்தாபனம் ஆகியவை கூட்டாக விடுத்த அறிக்கையில் -

பத்திரிகைத்துறையின் சுதந்திரத்தில் பொறுப்புணர்வும் உசிதத் தன்மையும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சகல தரப்பினரும் பொறுமை காக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பத்திரிகைத் துறையின் சுதந்திரத்தில் பொறுப்புணர்ச்சிக்கும் உசிதத் தீர்மானத்துக்கும் இடமிருக்கவேண்டும். சகல சமயங்களின் நம்பிக்கைகளையும் மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள அவர்கள், அண்மைக்கால வன்முறைகள் அமைதியான எதிர்ப்பியக்கம் என்ற வரையறையைக் கடந்துவிட்டன - என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொபி அனான் ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கைப் பிரிவுத் தலைவர் ஜாவியா சொலொனா, இஸ்லாமிய மாநாட்டுத் தலைவர் எக்மெலத்தின் இஹ் சநொக்லு ஆகியவர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

நபிகள் நாயகத்தைத் தொடர்புபடுத்தி சித்திரம் வெளியிட்டமைக்காக டென்மார்க் பத்திரிகைகள் உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லிம்களால் கண்டிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய பத்திரிகைகள் பேச்சுச் சுதந்திரத்தின் அடிப்படையில் இக்கேலிச் சித்திரங்களை வெளியிடுவதற்கு தங்களுக்கு உரிமை இருப்பதாக அறிவித்துள்ளன.

அல்லாவின் (இறைவன்) அல்லது நபிகள் நாயகத்தின் உருவங்கள் என எதுவும் பிரசுரிக்கப்படுவதை இஸ்லாமிய பாரம்பரியம் தடுக்கின்றது. (ப)

# அ.தி.மு.க. அணிக்கு வாருங்கள்:

## வைகோவுக்கு காளிமுத்து அழைப்பு



சென்னை,பெப்.9

தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி அ.தி.மு.க அணியில்சேர வைகோ முன்வர வேண்டும் என்று அ.தி.மு.க. அவைத் தலைவர் கா.காளிமுத்து அழைப்பு விடுத்தார்.

பேரவைத் தலைவர் பதவியில் இருந்து விலகியபின் சென்னையில் முதல்முறையாக அ.தி.மு..க பொதுக் கூட்டத்தில் செவ்வாய்க்கிழமை அவர் உரையாற்றினார்.

அவர் கூறியதாவது:-

1971 இல் பேரவைத் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் இடையே கடும்மோதல் இருந்தது. திமுகவுக்காக எம்.ஜி.ஆர்.தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்தார். தமிழகப் பேரவை வரலாற்றில் அப்போது தான் தி.மு.க. 184 இடங்களைக் கைப்பற்றியது.

தி.மு.கவில் இருந்து எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்ட பிறகு 1977 இல் நடந்த தேர்தலில் 48 இடங்களில் மட்டும் அக்கட்சி வென்றது. 1980 களில் 38 இடங்களாகக் குறைந்தது. 1984 இல் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபடியே ஆண்டிப்பட்டியில் எம்.ஜி.ஆர். வெற்றிபெற்று மூன்றாவது முறையாக முதல்வரானார். அப்போது தி. மு.க. 22 இடங்களில் மட்டும் வென்றது. 10 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டு 12 ஆகக் குறைந்தது. அதன் பிறகு அ.தி.மு.க. இரண்டாக பிரிந்ததால் 1990 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது.

அ.தி.மு.கவில் பிரிந்த இரண்டு அணியையும் இணைத்தது மட்டுமன்றி இரட்டை இலை சின்னத்தையும் ஜெயலலிதா மீட்டார். 1991 இல் ஆட்சியை கைப்பற்றினார்.ஒரே இடத்தில் தி.மு.க. வென்றது.அவரும் பதவி விலகியதால் தி.மு.கவில் பலம் பூஜ்யமானது. ராஜ்யத்தை ஆண்ட தி.மு.கவை பூச்சியமாக்கியவர் ஜெயலலிதா.

வீரப்பனை வீழ்த்திய வீராங்கனை ஜெயலலிதா. இந்த ஒரு சாதனைக்காகவே அவர் நூறு ஆண்டு தமிழகத்தை ஆளலாம்.



தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு அமைதி நன்றாக உள்ளது. ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தொழில் வளம் பெருகும் நல்லாட்சி தொடரும். தி.மு.க. கூட்டணி அமைப்பது குடும்ப அரசியலுக்காகத்தான் ஸ்டாலினைமுதல்வராக்கவே திட்டம்.

மூங்கில் காட்டில் தீ ஏற்பட்டால் சந்தன மரமும் எரிந்து சாம்பலாகும். தி.மு.க. கூட்டணியில் உள்ள நல்லவர், நியாய மானவர் வெளியேற வேண்டும்.துரியோதனன் கூட்டத்திலிருந்த துரோணர், பீஷ்மர், கர்ணன் போன்ற நல்லவர்களும் மாண்டனர். நல்லவரான கர்ணன் வெளியேற வேண்டும்.நான் யாரைக் குறிப்பிடுகிறேன்என்பது உங்களுக்குத் தெரியும். பாண்டவர் அணிக்கு வந்தால் வாழலாம். இதை வைகோ உணர்ந்தால் சரி - என்றார் காளிமுத்து. (ஐ)

## அல்-கெய்டா அமைப்பின் முக்கிய தலைவர் கைது!

பக்தாத்,பெப்.9

அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அபு தார் எனப்படும் முகமது ரபி ஈராக் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். ஈராக் அரசு தொலைக் காட்சியான 'ஈராக்கியா டி.வி.' இதைத் தெரிவித்தது.

ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல்-கெய்டா அமைப்பின் முக்கிய தலைவர்கள் வரிசையில் முகமது ரபி 4ஆவது இடத்தில் இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

உலக அரங்கில்

## சுமத்ராவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கருவியில் அதன் திறன் 5.2 எனப் பதிவாகியிருந்தது.

சுமத்ராவின் நியாஸ் பிராந்தியத்தில் காலை 5.25 மணிக்கு அந்த நில நடுக்கம் ஏற்பட்டது. (ஐ)

# அ.தி.மு.க. கூட்டணியில் திருமாவளவன்?



சென்னை.பெப்.9

தி.மு.க. புறக்கணிக்கும் நிலையில் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேருவது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பரிசீலிக்கும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி மாற்று அணி அமைக்குமாறு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸுக்கு, திருமாவளவன் யோசனை தெரிவித்தார். ஆனால், இந்த யோசனையை ராமதாஸ் நிராகரித்துவிட்டார்.

நட்புக்காகவும் தமிழுக்காகவும் பா.ம.கவுடன் இணக்கமான உறவு வைத்துள்ளோம். பா.ம.க. முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறோம். இதனால் தனித்து எந்த முடிவும் எடுக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். இந்நிலையில் தி.மு.க. கூட்டணி எங்களைப் புறக்கணித்தால் மாற்று அணி குறித்து பரிசீலிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று விடுதலைச் சிறுத் தைகள் கட்சி வட்டாரங் கள் கூறின.

வரும் 15ஆம் திகதி விடுதலைச் சிறுத்தைகள் மத்திய குழுக் கூட்டம் நடை பெறுகிறது. இக்கூட் டத்தில் தேர்தல்கூட்டணி குறித்து முடிவு செய்யப்படுகிறது. தி.மு.க. கூட்டணியில் வாய்ப்பு இல்லை என்றால் அடுத்த நடவடிக்கை என்ன என்பது குறித்து அக்கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# கனடா புதிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர்

கனடா நாட்டின் புதிய பிரதமராக கன்சர் வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஸ்டீபன் ஹார்ப்பர் (47) திங்கட்கிழமை பதவியேற்றார்.

இரண்டாம் எலிசபெத் ராணிக்கு விசுவாசமாக இருப்பேன் என்று பதவியேற்பின் போது ஹார்ப்பர் உட்பட அமைச்சர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். ஹார்ப்பர் கனடாவின் 22ஆவது பிரதமர். புதிய அமைச்சரவையில் 6 பேர் பெண்கள், கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்டதில் 14 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒட்டாவாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடந்த விழாவில் ஹார்ப்பர் மற்றும் 26 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.



முன்னதாக பதவியேற்பு விழாவுக்கு வழக்கமாக வரும் 'லிமோசின்' காரைத் தவிர்த்து 'டாட்ஜ் காரவன்' காரில் தமது மனைவி தாய் 2 குழந்தைகள் மற்றும் நண்பர்களுடன் வந்தார் ஹார்ப்பர். கனடாவில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது கன்சர் வேடிவ் கட்சி. (ஐ)






# கப்பல் மூழ்கிய போது உதவி பெற முடியவில்லை

## எகிப்திய கப்பல் கப்டன் தெரிவிப்பு

கெய்போ,பெப்.9

1400 பயணிகளுடன் செங்கடல் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது கடந்த வெள்ளியன்று கடலில் மூழ்கி விபத்துக்குள்ளான கப்பலில் இருந்து உடனடியாக எந்தக் கப்பலையும் உதவிக்கு அழைக்க முடியவில்லை என்று அந்தக் கப்பலின் கப்டன் தெரிவித்துள்ளார்.

கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கையில் தமது பயணிகளின் உயிரைக் காப்பாற்றக்கூடிய உயிர்காக்கும் கப்பல் ஒன்றை அடையாளம் கண்டு சமிக்ஞை பிறப்பித்ததாகவும் எனினும் அது திரும்பி வந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளாது சென்றுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மீண்டும் ஒரு விபத்துச்சம்பவத்தைத் தடுக்க தமது பயணிகளை காக்குமாறு அந்த கப்பலிற்கும் வேறு சில கப்பலிற்கும் தான் அழைப்பு விடுத்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மூழ்கிய கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான 'அல்-ஷலாம் 94' எனும் கப்பலை சவுதிஅரேபியா மீட்புப் பணிகளிற்கு அனுப்பியது எனவும் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலை பாதுகாப்பான நிலையில் வைத்து மேற்படி கப்பலால் அடைய முடியவில்லை எனவும் சவுதிஅதிகாரிகள் தெரிவித்தனர்.

கப்பல் மூழ்கிய விடயத்தில் கப்பல் மாலுமிகளின் செயற்பாடு குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

[illegible] அருகில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல் ஒன்றுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றார் என்றும் அது நீண்ட நேரத்திற்குப் பயனளிக்கவில்லை என்றும் பின் இறுதியாக வானொலித் தொடர்பு கிடைத்ததாகவும் கப்பல் கப்டனை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"நான் உட்பட 1400 பயணிகளையும் காப்பாற்றுவதற்காக, கப்பல் புறப்பட்ட இடத்திற்கே அதனை மீண்டும் திருப்ப நான் தீர்மானிக்கவில்லை. காலநிலை அதற்குச் சாதகமாக இருக்கவில்லை. கற்பனை செய்வதை விடவும் மிகப்பெரிய அலைகள் அந்தப் பிராந்தியத்தில் அடித்துக் கொண்டிருந்தன என்று அவர் விவ ரித்தார்.

கப்பல் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "மூழ்கிய கப்பலில் இருந்து அதிக தூரத்திலேயே உதவிக்கு அழைக்கப்பட்ட கப்பல் சென்றுகொண்டிருந்தது. அத்துடன் அது அளவுக்கதிகமான பயணிகளுடன் சென்று கொண்டிருந்தது என்று தெரிவித்தார்.

பயணிகளை மீட்க என்று அனுப்பப்பட்ட அதிவேகப் படகான அல்-ஷலாம் எல்னோரா என்ற கப்பலும் மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமானதாகும்.

அதனால் 154 பேர் காப்பாற்றப்பட்டனர். அந்தக் கப்பல் மீட்புப் பணிகளை முடித்து திங்களன்று துறைமுகத்தை வந்தடைந்தபோது கொல்லப்பட்டவர்களின் நூற்றுக் கணக்கான உறவினர்கள் அந்தக் கப்பலைத் தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1450 பயணிகளை ஏற்றிச்சென்ற இந்தக் கப்பல் இடைநடுவில் தீப்பற்றி வெடித்து மூள்கியதில் 1000 இற்கும் அதிகமான பயணிகள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின விரோதப் போக்குடையவர் துணைவேந்தராவதை ஏற்கமாட்டோம்!

## ஜனாதிபதிக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.9

யாழ்.பல்கலைக் கழகம் தமிழ் மக்களின் அரும் பெரும் கல்விச் சொத்து, அதனை நிர்வகிக்கின்ற துணைவேந்தராக சமூகப் பற்றும் இனப்பற்றும் உடைய ஒருவரே எம்மால் வேண்டப்படுகின்றார். எனவே எமது எதிர்பார்ப்புக்கு மாறாக உங்கள் தெரிவு இடம் பெறுவதை நாம் விரும்பவில்லை.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

யாழ்.பல்கலைக் கழகத்திற்கான அடுத்த துணை வேந்தரை தெரிவுசெய்கின்ற விடயத்தில் கருத்திற்கொள்ளவேண்டிய முக்கிய சில விடயங்களைத் தங்களது தயவான கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம். மேற்படி துணைவேந்தரை தெரிவுசெய்வதற்கான பல்கலைக்கழகத்தின் வாக்களிப்பு கடந்த 28.01.2006 அன்று நடைபெற்றது. வாக்களிப்பின் பிரகாரம் பேராசிரியர் கே.கந்தசாமி, பேராசிரியர் இ.குமாரவடிவேல், பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல். ஆகியோர் துணைவேந்தர் பதவிக்கான அடுத்த தெரிவிற்குதெரிவு செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் அடிப்படையில் பேராசிரியர் கே.கந்தசாமி அதி கூடிய வாக்குகளையும், பேராசிரியர் இ.குமாரவடிவேல் இரண்டாம் இடத்திலும் பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல். கடைசி இடத்திலும் உள்ளார். எனினும் பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல் தனக்குள்ள தனிப்பட்ட செல்வாக்கு மற்றும் அரசியல் செல்வாக்கினைப்பயன்படுத்தி துணைவேந்தர் பதவியை பெற்றுக்கொள்ள கடும்பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருவதாக மிகவும் நம்பகரமான தகவல் மூலம் அறிகிறோம்.

எமது பல்கலைக்கழகத்தில் வந்து அமர்ந்து எமது பல்கலைக்கழகத்தை சீரழிப்பதனை மட்டுமே அவரால் இங்கு மேற்கொள்ள முடியும். யாழ்.பல்கலைக்கழகம் நெருக்கடியான காலகட்டத்தில் கடும் ஆசிரியர் தட்டுப்பாட்டைச் சந்தித்தபோது பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூலுக்கு யாழ்.பல்கலைக் கழகம் நினைவில் இல்லாது போய்விட்டது.

யாழ்.பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் அரும்பெரும் ஒரு கல்விச்சொத்து. எமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்புள்ள உயர்ந்த கல்வி நிறுவனம் அந்த பொறுப்புள்ள கல்வி நிறுவனத்தை நிர்வகிக்கின்ற துணைவேந்தராக ஒரு சமூகப் பொறுப்பும் இனப்பற்றும் உடைய ஒருவரே எம்மால் வேண்டப்படுகின்றார்.

துணைவேந்தரைத் தெரிவுசெய்கின்ற விடயத்தில் பெற்றுக்கொண்ட வாக்குகள் எண்ணிக்கை என்ற விடயத்திற்கும் அப்பால் ஆற்றல், ஆளுமை என்ற விடயத்திற்கும் அப்பால் இறுதி முடிவு எடுக்கின்ற அதிகாரம் ஜனாதிபதியாகிய தங்களுக்குண்டு என்பதால் எங்களது வேண்டுகோளைத் தங்களது தயவான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

எனவே, பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல். எமது பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராகத் தெரிவுசெய்யப்படுவதனை நாம் விரும்பவில்லை. எமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, உங்கள் தெரிவு இடம்பெறவதை நாம் விரும்பவில்லை.

எனவே, மேற்படி வாக்களிப்பில் கூடிய வாக்குகளை பெற்றுக்கொண்ட இருவரில் ஒருவரைத் தெரிவுசெய்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# யாழ்.மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு மீண்டும் கடிகாரம் தந்தது பிரிட்டன்

## எனினும் அதை எடுத்துவந்து பொருத்துவதில் சிக்கல்!

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.நகரில் அமைந்துள்ள மணிக்கூண்டு கோபுரத்தில் பொருத்தப்பட்டிருந்த மணிக்கூடுகள் பழுதடைந்ததையடுத்து மீண்டும் புதிய மணிக்கூடுகளை பிரிட்டிஷ் அரசு வழங்கியுள்ளது-

யாழ்.நகரில் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள மணிக்கூண்டுக் கோபுரம் போர்ச் சூழ்நிலை காரணமாக சேதமடைந்திருந்தது.

பின்னர் சமாதான சூழலின்போது யாழ். மாநகர சபை மேற்கொண்ட முயற்சியினால் புனரமைப்புச் செய்யப்பட்டது. மணிக்கூண்டுக்கள் கோபுரத்தில் மணிக்கூடுகளைப் பொருத்துவதற்கு பிரிட்டிஷ் அரசு கொழும்பில் உள்ள விமல தர்ம பிறதர்ஸ் என்ற கம்பனியுடன் ஒப்பந்தம் செய்து நான்கு மணிக்கூடுகளை வழங்கியிருந்தது.

இந்த நான்கு மணிக்கூடுகளும் மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்ட சில நாள்களிலேயே பழுதடைந்துவிட்டன -

இது தொடர்பாக யாழ்.மாநகர சபையினால் பிரிட்டிஷ் அரசிற்குத் தெரியப்படுத்தப் பட்டது.

இதனையடுத்து பல வருடங்கள் கழிந்த நிலையில் பிரிட்டிஷ் அரசு கடந்த மாதம் நடுப்பகுதியில் மீண்டும் மணிக்கூடுகளை அனுப்பி வைத்துள்ளது.-

கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ள மணிக்கூடுகளை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவந்து மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்துவ தற்குரிய தொழில்நுட்பவியலாளர்கள் பின்னடித்து வருகின்றனர் என்று கூறப்பட்டது. குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால்தான் தாங்கள் இங்கு வரமுடியாதிருப்பதாக மாநகர ஆணையாளர் சி.வீ. கே. சிவஞானத்திற்கு விமலதர்ம பிறதர்ஸ் கம்பனியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-7)

## திருத்தம்

நேற்றைய 08.02.2006 உதயனில் 13 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய **திருமதி ஜெயகாந்தன் தமயந்தி** என்பவருடைய மரண அறிவித்தல் விளம்பரத்தில் விளம்பர தாரரின் முகவரி **'தபாலக வீதி, மகளிர் கல்லூரி முன்பாக, சாவகச்சேரி'** என்று இருக்க வேண்டும். யாழ்ப்பாணம் என்று இருப்பது தவறாகும்.

(ஆ-ர்)

# அதியுயர் தொழில் நுட்பக் கல்லூரி கிளிநொச்சி மாவட்டத்தில் அமையும்

## அறிவியல் நகரில் நேற்று அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.9

பொருண்மிய மதியுரையகத்தின் நோர்வேக் கிளையினரால் என்.ஐ.ரி.ஒ.நிதியுதவியுடன் கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்படவுள்ள அதியுயர் தொழில் நுட்ப பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து மங்கள விளக்கினை கனடிய தொழில் நுட்பக் கல்லூரி இணைப்பாளர் ரெட் வில்லியம் ஏற்றிவைத்தார்.

பின்னர் கட்டடத்திற்கான முதலாவது அடிக்கல்லினை திட்டப்பணிப்பாளர் முரளிதரன் நாட்டிவைத்தார். தொடர்ந்து கருத்துரையினை பொருண்மிய நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் வழங்கினார்.

(த)





அடிக்கல் நடும் வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்கள்...




## வீடு தேவை

இலவச கணனிப்பயிற்சி மற்றும் ஆங்கில வகுப்புக்களை நடத்திவரும் அரசசார்பற்ற நிறுவனமொன்றின் பயிற்சி நிலைய, நிர்வாக பணிகளுக்காக வீடு/கட்டடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு யாழ்.நகரப்பகுதிக்குள் தேவைப்படுகிறது. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 7283719 (C/47767)

## அழைப்பிதழ்

மெக் கோஸ்ட் கட்டர் சுப்பர் மாக்கெட்

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 28ம் நாள் (நாளை 10/02/2006 வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணி தொடக்கம் 8.40 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

MAK Cost Cutter Super market

என்ற வாணிப வியாபாரத் தொகுதியை இல, 484 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்க உள்ளோம். அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பணிப்பாளர்கள்,பணியாளர்கள்
இல.484,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் கிடைப்பது தாமதம்; சாரதிகள் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ்.மாவட்ட சாரதிகளுக்கான நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் கொழும்பில் உள்ள மோட்டார் திணைக்கள தலைமைப் பீடத்திலிருந்தே வழங்கப்படுகின்றன. இதனால் சாரதிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் சகல மோட்டார் வாகனங்களுக்குமான சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் யாழ். அலுவலகத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். அங்கு எழுத்து, செயல்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியடைவோருக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் யாழ்.அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றன.

நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கென அவர்களின் விண்ணப்பங்கள் பின்னர் கொழும்புத் தலைமையலுவலகத்திற்கு யாழ்.அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்படுகின்றன. தலைமையலுவலகத்திலிருந்து நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் உரியவர்களை வந்தடைவதற்கு வருடக் கணக்கில் தாமதம் ஏற்படுகிறது. இதனால் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதிச் சோதனையின்போது பொலீஸார் நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களையே பரிசோதிக்கின்றனர். நிரந்தர அனுமதிப் பத்திரங்களைப் பெறமுடியாதவர்கள் இதனால் சிரமங்களின் மத்தியிலேயே பயணம் செய்கின்றனர். (ஐ-202-203)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு பணியாளர்கள் நியமனம்

தென்மராட்சி,பெப்.9

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு ஆய்வுகூட நுண்ணியலாளர், ஆண் தாதிய உத்தியோகத்தர், சிற்றூழியர் மேற் பார்வையாளர் ஆகியோர் சுகாதாரத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆய்வுகூட நுண்ணியலாளராக எஸ்.சுந்தரலிங்கம் மீள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ தாதிய உத்தியோகத்தராக இராசையா தவேந்திரனும் மேற்பார்வையாளராக இ.கந்தசாமியும் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் விடுத்த வேண்டுகோளையடுத்து யாழ். பிராந்திய சுகாதார-சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இந் நியமனங்களை வழங்கியுள்ளார். (ஐ-117)

## மருந்துக் கலவையாளர்களுக்கான 9 மாதப் பயிற்சி நெறி ஆரம்பம்

குருநகர்,பெப்.9

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் மருந்துக் கலவையாளர் பயிற்சிநெறி கடந்த திங்களன்று யாழ்.பண்ணையில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பயிற்சி நெறியில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகவும் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆர்.இரவீந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

ஆரம்ப வைபவத்தில் வரவேற்புரையை யாழ்.பிராந்திய மருந்தாளர் ஆர்.குமாரதாசனும் சிறப்புரைகளை வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆர்.இரவீந்திரன், சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை, வட மாகாண மருந்துக் கலவையாளர் சங்கச் செயலாளர் எம்.அருளானந்தம் மற்றும் விரிவுரையாளர்கள் சார்பில் மருந்தாளர் எஸ். விக்னேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர். யாழ்.பிராந்திய பயிற்சி நிலையத்தின் பொறுப்பாளர் எஸ்.ஜெயக்குமார் நன்றியுரை வழங்கினார்.


சுமார் ஒன்பது மாதங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறி வகுப்புகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 52 பயிற்சியாளர்கள் கலந்துகொள்கிறார்கள். இவர்களுக்கான விரிவுரைகள் யாவும் ஆங்கில மொழியில் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சிநெறி நிறைவில் பரீட்சை நடத்தப்பட்டு தகுதியான பயிற்சியாளர்கள் மருந்துக் கலவையாளர் பதவிக்கு நிரந்தர நியமனம் செய்யப்படவுள்ளார்கள். இதேநேரம், பயிற்சிக் காலத்தின்போது கொடுப்பனவும் வழங்கப்படும். யாழ்.மாவட்டத்திலுள்ள பெரும்பாலான வைத்திய நிறுவனங்களில் மருந்துக் கலவையாளர் பற்றாக்குறை காரணமாக மருந்துக் கலவையாளர் கடமைகளை இந்நிறுவனங்களில் சேவையாற்றும் சிற்றூழியர்களே தற்போது ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-51)

## 2,500 பாடசாலைகளில் அடுத்த தவணை ஆலோசனையும் வழிகாட்டலும் சேவை

அச்சுவேலி,பெப்.9

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 2500 பாடசாலைகளில் இரண்டாம் தவணையில் இருந்து 'ஆலோசனையும் வழிகாட்டலும் சேவை' நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைக்கு 1 ஏபி, 1சீ (1 AB, 1C) பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.




சமூக உளநல இடையீட்டு நிகழ்வு திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை கல்வி அமைச்சின் ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைக்கு பொறுப்பான பிரிவு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

சமூக உளநல இடையீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய ரீதியாக மாகாண ரீதியாக மற்றும் வலய ரீதியாக வள ஆளணிக் குழுக்கள் நியமித்து அவர்களுக்கு ஊடாக பாடசாலை மட்டத்தில் ஆலோசனையும் வழிகாட்டலும் சேவைக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கு காலத்திற்கு காலம் பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் பயிற்சி அளிப்பதற்கான வள ஆளணியினர் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப அமைப்பின் (ஜி.ரி.இசற்) நிபுணத்துவக் குழுவை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தேசிய மட்ட வள ஆளணிக்குழுவின் தலைவராக டாக்டர் காமினி ஹேமச்சந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

வலய ரீதியான ஆணைக்குழுவில் வலய ரீதியில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களும் வழிகாட்டல் ஆலோசனைத்துறையில் பல்கலைக்கழக மட்டத்தில் பட்டம் பெற்றவர்கள் அல்லது டிப்ளோமா பயிற்சி பெற்றவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று வடக்கு -கிழக்கு மாகாண வழிகாட்டல் ஆலோசனைக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் கே.முருகுப்பிள்ளை தெரிவித்தார். (ஐ-11)

## பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி

### யாழ்.கல்வி வலய முறைசாராப் பிரிவு ஏற்பாடு

அச்சுவேலி,பெப்.9

கிராமிய மட்டத்தில் பாடசாலைக்குச் செல்லாத மற்றும் பாடசாலையிலிருந்து இடை விலகிய மாணவர்களுக்கு யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் அடிப்படைக் கல்வி அறிவூட்டல் மற்றும் பயன்தரும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நெறிகளை வழங்குவதற்குரிய செயற்றிட்டத்தை இந்த வருடம் நடைமுறைப் படுத்தவுள்ளது.

சனசமூக நிலைய வாரியாக விவரங்களைத் திரட்டி 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட பிரிவினருக்கு பயிற்சி அளிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

25 பேரைக் கொண்ட ஒவ்வொரு குழுவுக்கும் சனசமூக நிலைய மட்டத்தில் பயிற்சி அளிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ள யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு, தொழிற்பயிற்சி பெறவிரும்பும் ஆண் - பெண் இருபாலாரின் விவரங்களையும் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சனசமூக நிலையத் தலைவர், செயலாளர்களுக்கு சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

பயன்தரும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகளாக ஆடை தயாரித்தல், கைப்பணிப் பொருள் உற்பத்தி, வரவேற்பு அறை அலங்காரம், உணவு பதனிடல், சமையற்கலை, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல், தோற்பொருள் உற்பத்தி, சுருக்கெழுத்தும் தட்டச்சும் (தமிழ் - ஆங்கிலம்), கணனிக் கல்வி, கணனித் தட்டச்சு, ஸ்கிறீன் பிறிண்டிங், படவரைகலை முதலிய 16 பாடத்துறைகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அடிப்படைக்கல்வி அறிவூட்டல் திட்டத்தின் கீழ் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்கும் இடைவிலகிய மாணவர்களுக்கும் எழுத்தறிவூட்டல் - பல்கலை நிகழ்ச்சித் திட்டமும், ஒருவருடம் - மற்றும் 3 மாதங்களைக் கொண்ட பயிற்சி நெறியாக வழங்கப்படவுள்ளது.

பயிற்சி நெறியில் சேர்ந்துகொள்ள விரும்பும் இளைஞர்களின் விவரங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு சனசமூக நிலையங்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

## முன்பள்ளி செல்லாத பிள்ளைகளின் விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு,பெப்.9

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் 3 வயது முதல் 5 வயது வரையான முன்பள்ளி செல்லாத பிள்ளைகளின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் கிராம அலுவலர்களால் முன்பள்ளி செல்லாமலிருக்கும் இப் பிள்ளைகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தரின் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## தபால் மூல வாக்காளரை உறுதிப்படுத்தும் அலுவலர்களுக்குப் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,பெப்.9

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பின் போது வாக்காளரை உறுதிப்படுத்தும் - அத்தாட்சிப்படுத்தும் - அலுவலர்கள் நியமனத்தில் புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:-

உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் வெளிமாவட்ட வாக்காளர்கள் தாம் வசிக்கும் மாவட்டங்களில் இருந்து தபால் மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. அவ்வாறு வாக்களிப்பவர்களை அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்கள் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களால் நியமிக்கப்படுவர்.

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பை அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களை நியமித்து செயற்படுத்துவதில் புதிய நடைமுறை பின்பற்றப் படவுள்ளது.

மாவட்ட இலக்கம், மாவட்டத்தின் முதல் எழுத்து, திணைக்கள எழுத்து போன்றவற்றை உள்ளடக்கியதாக அந்த அலுவலர்களுக்கு இலக்கங்கள் வழங்கப்படும். அந்த இலக்கங்களே அவர்களை உறுதிப்படுத்தும் என்றார். (த-202)

## பரிசாரகர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த 3ஆவது தொகுதியினருக்கான பரிசாரகர் பரீட்சை பிற்போடப் பட்டுள்ளது. புதிய திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## சாயிசிந்தனை



### உண்மையான பக்தி

*யக்ஞத்தின் போது, உச்சரிக்கப்படும் ஒவ்வொரு வேத மந்திரத்திற்கும் ஆழ்ந்த அர்த்தம் உண்டு. ஒவ்வொரு மந்திரமும், ஒவ்வொரு தெய்வீக வடிவுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. சரியான விலாசம் எழுதப்பட்ட ஒவ்வொரு கடிதமும், அது அடுத்த தெருவானாலும், அன்றி தொலைதூரமானாலும் சென்று சேரும். அவ்வாறு தெய்வீக வடிவங்களுக்கான விலாசம் தான் மந்திரங்கள். அவை சரியான முறையில் உச்சரிக்கப்படுமானால் விரும்பும் பயன்களை அவை ஈட்டித் தரும்.*

*காலம் என்பது கடவுள். அதனால் தான் கடவுளை - காலாய நமஹ, காலகாலாய நமஹ, காலதீதாய நமஹ... எனப் போற்றுகின்றனர். காலம்தான் பிறப்புக்கும், இறப்புக்கும் காரணம். தெய்வீக அருள் பெற்றவரைத் தவிர வேறு எவராலும் காலத்தை வெல்லமுடியாது.*

*இங்கு ஒரு சிறிய உதாரணம்: மிருகண்டு முனிவருக்கு, மார்க்கண்டேயர் என ஒரு மகன் இருந்தான். அவனுக்கு 16 ஆண்டுகள் தான் வாழ்க்கை தரப்பட்டிருந்தது. ஆனால் அது அவனுக்குத் தெரியாது. ஓர் இரவு, அவனது பெற்றோர்கள் வருந்துவதைப் பார்த்தான். விசாரித்துப் பார்க்கையில், அவனதுமுடிவு நெருங்கிவிட்டதாகவும், அதுவே அவர்களை வருத்துவதாகவும் அறிந்துகொண்டான். இதைக் கேட்ட பிறகு, அவன் அருகிலிருந்த சிவாலயத்திற்குச் சென்று, சிவலிங்கத்தைச் சுற்றிக் கட்டிப் பிடித்துக்கொண்டு 'ஓம் நமசிவாய' என்று மனப்பூர்வமாக உச்சரிக்கத் தொடங்கினான். குறிப்பிட்ட வேளையில், யமன் (மரணதேவன்) தன் பாசக்கயிற்றை மார்க்கண்டேயரின் கழுத்தைச் சுற்றி வீசினான். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டிக் கொண்டிருந்ததால், பாசக்கயிறின் சுருக்கு சிவலிங்கத்தையும் சேர்த்து சுருக்கிவிட்டது. சிவபெருமான் உடனே பிரத்தியட்சமாகி யமனைக் கண்டித்தார். ''என்னைச் சுற்றி சுருக்கிட எங்ஙனம் துணிந்தாய்?'' எனக் கூறி யமனை எரித்து சாம்பலாக்கினார். மார்க்கண்டேயனின் பக்தியை மெச்சி அவனுக்கு அம்ருதத்துவம் வழங்கினார்.*

*உண்மையில், ஈஸ்வரன் தான் மார்க்கண்டேயருக்கு 16 வயது என நிர்ணயித்தது. ஆனால் மார்க்கண்டேயனின் ஆழ்ந்த பக்தியிலும், முழுமையான சரணாகதியிலும் ஈஸ்வரன் தனது சங்கல்பத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. உண்மையான பக்தனை விட உயர்ந்தவர் இவ்வுலகில் எவருமே இல்லை.*

*(ஆதாரம் - சனாதனசாரதி).*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

WP GQ 4075 இலக்கமுடைய பசன் மோட்டார் சைக்கிளும் HS Supper cup 50 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளும் Sri Ram Honda ஜெனரேற்றர் 1000 kw விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0773248988. (46549)

## வாடகைக்கு

K.K.S.வீதி, கோண்டாவிலில் 3 அறைகளுடன் கூடிய மேல் வீடு வாடகைக்குண்டு. விவரம் நேரில். தொடர்பு: 0776966323. (46555)

## இறைச்சிக்கோழி தேவை

கல்பேட் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. தொடர்பு: தாசன் பாழ், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46570)

## பணிப்பெண் தேவை

*தாயும் பிள்ளையும் (படிக்கும் பிள்ளை) அல்லது அனாதைப் பெண் 45 வயதிற்கு மேற்பட்டவராகவும் 50 வயதிற்குட்பட்டவராகவும் நற்குணசாலியாகவும் திடகாத்திரமானவராகவும் இருத்தல்வேண்டும். தொடர்பிற்கு: பொ.வேலுப்பிள்ளை, 41/4, செம்மணி வீதி, யமுனாரி குள ஒழுங்கை, நல்லூர்.* (46532)

## தவறிவிட்டது

கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தம்பையா பத்மநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (560133790V) 04.02.2006 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குயின்ரன், இல.39, மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (46471)

தவச்செல்வம் என்பவரது சொந்தப் பாவனையிலுள்ள 077-6365957 இலக்கங்களைக் கொண்ட டயலொக் கையடக்க தொலைபேசி 31.01.2006 இல் பரமேஸ்வராச் சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ.தவச்செல்வன், கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (46567)

## சிறுவர்களுக்கான கருத்தமர்வு

யாழ்ப்பாணம், பெப்.9

கியூடெக், கரித்தாஸ் சமாதானப் பிரிவால் சில்லாலை கிறிஸ்து அரசர் சனசமூக நிலையத்தில் சிறுவர்களுக்கான முழுநாள் கருத்தமர்வு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நடத்தப்படவிருக்கிறது. சிறுவர்களும் சமூகமும்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கப்படவுள்ளது. (த-190)

# தென்மராட்சிப் பகுதியில் கிராம ரீதியாக பாவனையாளர் குழு அமைக்க ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாவனையாளர் ஒழுங்கமைப்புக் குழு விரைவில் தெரிவுசெய்யப்படவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடாத இருவர் வீதம் வரவழைக்கப்பட்டு நிர்வாக சபை தெரிவுசெய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

பிரதேச பாவனையாளர் ஒழுங்கமைப்பு நிர்வாக சபைத் தெரிவின் பின்னர் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இதனை ஆரம்பிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பிரதேச மட்டம், கிராம அலுவலர் பிரிவு மட்டங்களில் இக் குழுக்களை அமைக்குமாறு யாழ்.அரச அதிபர் சகல பிரதேச செயலர்களையும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-117)

# சுகாதார உளவியல் திட்டத்தில் பணியாற்றுவோருக்கு சைக்கிள்கள்

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்குகிறது

நல்லூர்,பெப்.9

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை தனது பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலைகள் சுகாதார சமூக உளவியல் திட்டத்தில் பணியாற்றும் தொண்டர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை துவிச்சக்கரவண்டிகளை வழங்க உள்ளது.

பாடசாலைகள் சுகாதாரம் 'சமூக உளவியல்திட்டம் டென்மார்க்' மற்றும் செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களுக்கான சர்வதேச சம்மேளனத்தின் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சித் திட்டத்தில் பணியாற்றும் தொண்டர்கள் அன்றையதினம் பிற்பகல் 4 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு நேரில் சமுகமளிப்பதன் மூலம் தமக்குரிய துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் -

துவிச்சக்கரவண்டிகள் பெறுபவர்களின் பெயர்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் திட்ட அலுவலர் அறிவித்துள்ளார். (த-111)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவு

அச்சுவேலி,பெப்.9

சமூக உளவள இடையீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில், ஆலோசனையும் வழிகாட்டலும், செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பாடத்துறை ஆசிரிய ஆலோசகர்களுக்கு மாதாந்தம் மேலதிக கொடுப்பனவாக 4 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

வலய ரீதியாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர்களில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 24 ஆசிரிய ஆலோசகர்களுக்கு தொழில் தொடர்பான பயன்பாட்டிற்கு மோட்டார் சைக்கிள்களும் அதற்கான எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றன.

இலங்கை பூராகவும் வலய ரீதியாக பாடசாலை மட்ட ஆலோசனை வழிகாட்டல் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு 105 ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-11)

ஓம் கணபதி துணை

# விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தைத்திங்கள் 28 ஆம் நாள் 10.02.2006 வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரமும் சுக்கிலபட்க்ஷ திரயோதசி திதியும் கவுலவ கரணமும் சித்த யோகமும் கூடிய காலை 7.40 மணி முதல் 9.05 மணி வரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்த வேளையில்

யாழ்ப்பாணம், தையிட்டி
பிரம்மஸ்ரீ சிவசுந்தர சர்மாவின்
பௌவித்திரியும்
சிவஸ்ரீ சுந்தரதாச குருக்கள் தம்பதிகளின்
ஜேஷ்ட புத்திரியுமாகிய சௌபாக்கியவதி

**ஊர்மிளா**

அவர்களை

யாழ்ப்பாணம் - கைதடி
பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசர்மாவின்
பௌத்திரனும்
சிவஸ்ரீ ஐயாத்துரை குருக்களின் புத்திரனும்
சிரஞ்சீவி சிவஸ்ரீ

**அரிஹர குருக்கள்**

(பிரதமகுரு, மிசிசாக் துர்க்கை அம்மன் ஆலயம் - கனடா)

அவர்களுக்கு

கன்னிகாதான திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகணம் செய்து கொடுக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று ஷ முகூர்த்தம் கொழும்பு - 11, செட்டித்தெரு, 251 புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகை தந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 10.02.2006 வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு
வதூவரகிரஹப்பிரவேசம்: 13.02.2006 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ சுந்தரதாச குருக்கள் தம்பதிகள்
8/3, மேபீல்ட் றோட்,
கொழும்பு - 13.
T.P. 2345323, 0785243197.

சுபம்

சிவஸ்ரீ ஐயாத்துரை குருக்கள் தம்பதிகள்
(கற்பக விநாயகர் ஆலயம் உரும்பிராய்)
கைதடி வடக்கு.
T.P. 021 4591867, 0779172671.

# திருவாசக முற்றோதல்

தைப்பூசத்தையொட்டி நுணாவில் கிழக்கு, கற்குழி கந்தசாமி தேவஸ்தானத்தில் திருவாசமுற்றோதல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. (த-31)

# நன்றி நவிலல்



**நாகலிங்கம் அழகரத்தினம்**

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - காணி அபிவிருத்தித் திணைக்களம்)

கடந்த 05-02-2006 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவரின் பிரிவில் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயரில் பங்கேற்றவர்களுக்கும் இறுதிக்கிரியைகளிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டு எமக்குப் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் அவர் நோயுற்றிருந்த போது அவருக்கு ஆறுதல்வார்த்தை கூறியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

203/6, கண்டி வீதி,
சரஸ்வதி லேன்,அரியாலை.

அ.இராசம்மா (மனைவி),
பிள்ளைகள்.
(46572)(21.19.45)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.9

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ஆர்.விக்கினேஸ்வரி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகக் கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் கலந்து கொள்வார். (த-12)

# திருமுறைப் பாராயணம்

யாழ்ப்பாணம், பெப்.9

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் எதிர்வரும் சனிக்கிழமை கொக்குவில் மந்தாரவன சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலில் அகத்தியார் தேவாரத்திரட்டு, பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன ஓதும் நிகழ்வு இடம்பெறும்.

மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பக்த அடியார்களைக் கலந்துகொண்டு பண்ணிசை கேட்டு உள்ளத்தை பக்குவப்படுத்திச் செல்லுமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (த-14)

# உணவகத்துக்கு அபராதம்

தென்மராட்சி, பெப்.9

சுகதார முறைக்கேற்ப இயங்காத சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிவான் மிருசுவில் பகுதியில் உள்ள மேற்படி சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளருக்கே அபராதம் விதித்தார். (த-117)


## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், கனடா, நோர்வே, டென்மார்க், சுவிஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்கள்,

வீடியோ நாடா, கடிதங்கள் ஆகியவற்றை மேற்கூறிய நாடுகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மூன்று நாள்களில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கலாம். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

1kg கட்டணம் 1400/=

விசேட விலைக்கழிவு ஐந்து கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு 1Kgகட்டணம்

லண்டன் 500/=
சுவிஸ்600/=

தொடர்புகளுக்கு:-

RAINBOW TRAVELS & TOURS

32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3237, 0777 328219 (அபிநயா நகைமாடத்துக்கு மேல்)


# கண்ணீர் அஞ்சலி

பாலர் கல்விக்கழகப் போஷகர்

**வ.கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் மாமி

**திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம்**

*அவர்கள் விண்ணகத்தில் இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் எமது கண்ணீரைக் காணிக்கையாகச் சொரிகிறோம்.*

யாழ்ப்பாணம்

பாலர் கல்விக் கழக உறுப்பினர்,
ஆசிரியர்கள்.
(46571)(21.19.45)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் சோமசுந்தரம்

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி)

காரைநகர், விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் அவர்கள் 07.02.2006 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தில்லையம்பலம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் சந்திரகுமாரி (கொழும்பு), காலஞ்சென்ற பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ஜெயக்குமாரி (கனடா), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சு.இரத்தினராசா, பா.சந்திராதேவி, சு.சாந்தகுமாரி, ர.சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாந்தினி, சர்மிலா, ஜெனனி, மீரா, தர்சிகா, மயூரன், பவினா, வினித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2006) வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

354/9,பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(46561)(20-15-45-42)

தகவல்:
மகன்மார், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராளி வீரச்சாவு

வெலிகந்தைப் பகுதியில் கடந்த 26ஆம் திகதி இராணுவத்தின ரும் தேச விரோத சக்திகளும் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்ட தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார். மேஜர் கபிலன் (பொன னுச்சாமி ரவியன்/ரவி திகிலவத்தை, சந்திவெளி, மட்டக்களப்பு) என்ற போராளியே வீரச்சாவடைந்தார் என்று விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர். (எ-6)


## அச்சுவேலியில் தைப்பூசத்திருநாளில்

(11-02-2006) குதூகல ஆரம்பம்

இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

குதூகல ஆரம்பத்தை முன்னிட்டு கலைநிகழ்வுப் போட்டிகள் இலைமறைகாயாக மறைந்திருக்கும் கலைஞர்களை வெளிக் கொணரும் முகமாக 1982ஆம் ஆண்டுக்கு முந்திய கருத்தாளம் மிக்க பழைய பாடல்களைக்கொண்ட

★ பாட்டுக்குப் பாட்டு
★ பரதநாட்டியப் பாடலுக்கான நாட்டியம் (ஆண்,பெண், சிறுவர்)
★ காட்சியும் கானமும் (பாட்டுக்கு ஏற்ற நடிப்பு) ஆண்,பெண், சிறுவர்
★ சிறுவர்களுக்கான காட்சியும் கானமும்

நீங்கள் பங்குகொள்ள விரும்பும் பாடல்களின் 'சிடி' அல்லது 'கஸட்' உடன் 2006.02.14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நேரில் சமூகம் தரவும்.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு தனித்தனி பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

★ தேர்ந்து எடுக்கப்படுவர்கள் 2006.02.19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மண்டபத்தில் நடைபெறும் பெருவிழாவில் கலந்துகொள்ளலாம்.

★ நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கான அனுமதி இலவசம்.
★ பார்வையாளர் பிரவேசம் இலவசம்.

(சி/47772)(30-16-49)

வீடியோ கலாமினி
0602212431 அச்சுவேலி 0773053080


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி * 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14-01-1918 *** மறைவு 05-02-2001



தோற்றம் 18-06-1916 *** மறைவு 10-12-2003

**அமரர் செல்லையா இராசதுரை**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை)

**திருமதி பாக்கியம் பயஸ் இராசதுரை**

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
காலமெல்லாம் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபூரணம் இராசதுரை,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.

(46587)(30-16-49)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

மகரம்



746 நீலம்

07-02-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4074592-4089613

வெற்றி இலக்கங்கள் 24 32 40 51

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,28,398 | 10/- | 32,83,980/- |
| 2 இலக்கங்கள் | 30,200 | 20/- | 6,04,000/- |
| 1 இல+லக்கினம் | 29,934 | 30/- | 8,98,020/- |
| 2 இல+லக்கினம் | 2,722 | 100/- | 2,72,200/- |
| 3 இலக்கங்கள் | 765 | 500/- | 3,82,500/- |
| 3 இல+லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 24,00,450/- | - |
| மொத்தம் | | | 63,60,700/- |
| [illegible] | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| [illegible] மொத்த பரிசுத் தொகை | 3,92,131 | | 74,12,950/- |

இந்த வெள்ளிக்கிழமை ரூபா 31,34,050/-

| | |
|---|---|
| [illegible] | 4081104-2-60 |
| மட்டக்களப்பு | 4080350-8-87 |
| கொழும்பு | 4082709-8-38 |
| [illegible] | 4085929-5-61 |
| [illegible] | 4087100-4-53 |

வளமான வாழ்வித்து

அபிவிருத்தி லொத்தர் சபை


## தனி வழி போகும் முடிவால் ஜே.வி.பிக்குள் அதிருப்தி?

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்த லில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேராமல் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஜே.வி.பி. எடுத்திருக்கும் தீர்மானம் குறித்து அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் அதிருப்தியடைந்திருக்கின்றனர் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

தனித்துப் போட்டியிடும் வேளை மக்க ளிடம் முன்வைக்க வேண்டிய கொள்கைகள் மற்றும் பிரசார நடவடிக்கையின்போது எந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப் பது என்பவை தொடர்பில் இந்த அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பதே சிறந்ததெனக் கருதும் ஜே.வி.பியின் மூத்த உறுப் பினர்கள் சிலர், அது தொடர்பான தங்களின் தனிப்பட்ட யோசனைகளை கட்சித் தலைமையிடம் கூறியிருக்கின்றனர் எனவும், ஆனால், கட்சித் தலைமையில் உள்ளோர் மற்றும் தலைமையுடன் நெருங்கி நிற்கும் சிலர் அதனை நிராகரித்துள்ளனர் எனவும் தெரிகிறது.

எவ்வாறாயினும் தனித்துப் போட்டியிட்டு உள்ளூராட்சித் தேர் தலில் எதிர்பார்க்குமளவு ஆசனங்களைக் கைப்பற்ற ஜே.வி.பியி னால் முடியாது போகுமென்று மேற்படி மூத்த உறுப்பினர்கள் கட்சித் தலைமையிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றனர் என்றும் மேலும் தெரிய வருகின்றது. (க)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்

அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்: 10.30, 2.30



ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகர்ஸ் சுன்னாகம்

இன்று முதல் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00


### உரும்பிராயில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம் பெப்.9

வலி. கிழக்கு பிர தேசசபையின் உரும் பிராய் உப அலு வலக எல்லைக்குட் பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்க ளுக்கு இன்று முதல் தடுப்பூசி ஏற்றப்பட் டவுள்ளது.

அதற்கமைய இன் றையதினம் உரும் பிராய் வடக்கில் காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணேசா சன சமூக நிலையத்தி லும் -

முற்பகல் 10 மணிமுதல் 11.30 மணி வரை நவசக்தி சனசமூக நிலையத் திலும், முற்பகல் 11.30 மணி முதல் ஒரு மணிவரை சரஸ் வதி சனசமூக நிலை யத்திலும் -

நண்பகல் ஒரு மணி முதல் பிற் பகல் 3.30 மணி வரை மடத்தடி வை ரவ கோயிலடியி லும் வளர்ப்பு நாய் களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை வெள் ளிக்கிழமை உரும் பிராய் மேற்கு பகுதி யில் காலை 8.30 மணிமுதல் 10 மணி வரை மறக்களை அம்மன் கோயிலி லும் -

முற்பகல் 10 மணி முதல் 11.30 மணிவரை அன் னங்கை கனிமொழி முன்பள்ளியிலும்.

நண்பகல் 11.30 மணிமுதல் ஒரு மணிவரை திருக் குமரன் சனசமூக நிலையத்திலும் -

நண்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை சிவகுல வீதியிலும்.

பிற்பகல் 2.30 மணிமுதல் 3.30 மணிவரை பேக்கரி லேனிலும்-வளர்ப்பு நாய்களுக்குத் தடுப் பூசி ஏற்றப்படும். (எ-6)

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி செல்வராணி ஜெகதீசன்
அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னர் சிதம்பரப்பிள்ளை**
(மீசாலை - சாவகச்சேரி)

04.02.2006 இல் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம்.

(46584)(30-16-49)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை திட்டமிடல்/ நிதி உதவியாளர்
செல்வி மரியசேலி அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்
**செபஸ்தியாம்பிள்ளை-அருளானந்தம்** (தியாகு)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.
யா/நாரந்தனை றோ.க. மகாவித்தியாலயம்,
ஊர்காவற்றுறை, தீவகம்.

(46586)(30-16-49)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகலிங்கம் தங்கராணி

சுதுமலை தெற்கு, அண்ணாமலை வீதி, எச்சாட்டி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த கனகலிங்கம் தங்கராணி அவர்கள் 07.02.2006 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் கனகலிங்கத்தின் மனைவியும் அமரர் திருமதி துரைசிங்கம் இராஜேஸ்வரி, திருமதி கந்தசாமி மனோன்மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.காண்டீபன் (கொழும்பு), பிரகலாதன், துஷ்யந்தன், பிரதீபன், செந்தூரன், சுகந்தியா, தர்சினி, தர்சன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2006) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் Colombo Florist, 251, Hospital Road, Kalubowila மலர்ச்சாலையில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொகுவல மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

38B,Pirthibimbarama Road,
Kalubowila.

தகவல்:
Dr.T. காண்டீபன்
T.P.: 0777777902.

(சி/47771)(30-16-49)

### திருமதி தம்பிப்பிள்ளை திரேசம்மா



இராஜசிங்கம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிளை திரேசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தர்ராஜன் மற் றும் செபமாலை ஐயாச்சியோன் (யாழ். போதனா வைத்தியசாலை), அந்தோனி யம்மா, ராஜேஸ்வரி, அனிற்றம்மா ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (09.02.2006) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொஞ்சேஞ்சி சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செபமாலையோன் ஐயாச்சி
(மகன்).

(46588)(30-16-49)

### இராமலிங்கம் முருகையா

(ஓய்வுபெற்ற HABIB வங்கி உதவி முகாமையாளர் - கொழும்பு)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மரு தானையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் முரு கையா அவர்கள் நேற்று (08.02.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் இராசம்மா தம்பதி யரின் அன்பு மகனும் சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற உப அதிபர், யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) அன்புக் கண வரும், கணேஷ் (கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் நாகரத்தினம், கணேஷ் (மலேசியா), குமாரசாமி (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், கச்சேரி), நடராசா, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.14, பவுண்டன்
கவுஸ் லேன்,
[illegible]ஸ் றோட்,
மருதானை.
T.P.: 0112 685370

தகவல்:
இ.நடராசா (சகோதரர்)
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
T.P.: 0212227685

(46589)(30-16-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவை மருத்துவக் கல்லூரியில்

# ஈழத் தமிழ் மாணவி மீது பாலியல் பலாத்காரம்

இந்தியாவின் பிரபலமான புதுவை ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பயின்றுவரும் இலங்கை மாணவியை 3 பேர் கொண்ட கும்பல் ஒன்று பாலியல் பலாத்காரம் செய்ததால் புதுவையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மீனா என்ற மாணவி புதுவை ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார். அவரும் அவருடன் படிக்கும் அனந்து என்ற மாணவரும், கல்லூரி வளாகத்தில் உள்ள தண்ணீர் தொட்டி அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது 3 பேர் கொண்ட ஒரு கும்பல் அங்கு வந்துள்ளது.

மாணவன் அனந்தை அடித்து அங்கிருந்த ஒரு மரத்தில் அக்கும்பல் கட்டிப்போட்டது. பின்னர் அந்த மாணவன் கண் முன்பாகவே மீனாவை அக்கும்பல் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியது. பின்னர் அக்கும்பல் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டது.

படுகாயம் அடைந்த மாணவன் அனந்த் மற்றும் மீனா ஆகியோரை மாணவர்கள் அங்கிருந்து மீட்டு கல்லூரி விடுதிக்குக்கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்தப்பாலியல் கொடூரச் சம்பவத்தில் முக்கியப் பிரமுகர்களின் மகன் மாரும் சம்பந்தப்பட்டுள்ளதால் இந்த கொடூர சம்பவம் குறித்து பொலீஸார் வழக்குப் பதிவு செய்யத் தயங்குகின்றனர் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

(எ-க)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல விடயங்கள் குறித்து விலாவாரியாக விளக் கினர்.

இந்தப் பட்டறையில் முன்னைய பேச்சுக் குழுவில் இடம் பெற்ற முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொடவும் கலந்து கொள்ள ஏற்பாடாகியிருந்தது. ஆனால், அவர் நாட்டில் இல்லாத படியால் மேற்படி இரண்டு உறுப்பினர்கள் மட்டும் இதில் கலந்துகொண்டு விளக்கமளித்தனர்.

ஐ.தே.க.வின் இந்த நீண்ட அனுபவங்கள் பெரிதும் நன்மையைத் தந்தன என நேற்றைய பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மூத்த அமைச்சர் ஒருவர் 'உதயன்'இற்கு தெரிவித்தார். (எ-க)

## ஜெனீவா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகளை ஆதரித்து அமைதிப் பேச்சுகளில் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஜெனீவாப் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரலை நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு அரசாங்கத்திடம் முன்னரே கோரிக்கை விடுத்தது. ஆனால், இதுவரை அரசாங்கம் பதில் எதனையும் அளிக்கவில்லை.

ஜெனீவாப் பேச்சுகள் தொடர்பில் ஜனாதிபதியின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுகளின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில், அனைத்துத் தரப்புகளும் பொதுவான கொள்கையிலிருந்து செயற்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் அரசுக்கும், புலிகளுக்கும் நடைபெறவுள்ள பேச்சுகளில் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அதனை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துதல் என்பன பற்றியே பேசப்படவுள்ளதென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது.

பேச்சுக்கான திகதி குறிக்கப்பட்டு, பிரதிநிதிகள் பெயரிடப்பட்டு, அரச தூதுக்குழுவிற்கான முன்னோடி செயலமர்வுகள் நடைபெறும் தற்போதைய நிலையில் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படவில்லையென அரசால் கூறமுடியாது. எனவே, ஜெனீவாப் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரல் போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டதா, இல்லையா என்பதை அரசு உடனடியாக பகிரங்கப்படுத்தவேண்டும். அது அரசின் மிக முக்கியமான பொறுப்பாகும். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ-க)

## நோர்வே, சுவிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையும் இவர்கள் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுக்களுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாகப் பேச்சு நடத்துவர். (எ-6)

## வேட்புமனுக்கள்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது அரச தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நெரின் புள்ளே இடைக்காலத் தடை உத்தரவு வழங்குவதற்கு ஆறு அடிப்படை அம்சங்களைச் சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

அவற்றில் முக்கியமானது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர்கள் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்படவில்லை என்பதாகும்.

வேட்பு மனுக்களை ஏற்பதை இடைநிறுத்த வேண்டுமானால் அந்தப் பணிக்குப் பொறுப்பான அதிகாரிக்கே நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென்று சுட்டிக்காட்டிய அரச சட்டத்தரணி, இங்கு அந்தப் பணிக்குப் பொறுப்பானவர்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக எடுத்துக்காட்டினார்.

தெரிவத்தாட்சி அலுவலர்கள் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்படாத ஒரு மனுவில் அவ்வாறு குறிப்பிடப்படாத நபர்கள் தொடர்பில் நீதிமன்றம் எங்ஙனம் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கமுடியும் என அரச சட்டத்தரணி கேள்வி எழுப்பினர்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்தத் தேர்தல் தொடர்பான வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பும் அதிகாரமும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கே உண்டு, தேர்தல் ஆணையாளருக்கு இல்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். அந்த வாதத்தை ஏற்றுக்கொண்டு இடைக்காலத் தடையுத்தரவை வி)க்கும் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க மறுத்தது.

எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்ட தேர்தல் ஆணையாளரை எதிர்வரும் 20 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் 'நோட்டீஸ்' உத்தரவு பிறப்பிக்கப்பணித்தது.

மனுதாரர் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.என்.-சொக்ஸி ஆஜரானார்.

(எ-க)

## பெரும்பான்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயகத்தின் பதற்றமான- அச்சமான- சூழ்நிலையையும் இன்றைய அரசியல் நிலைமைகளையும் அக்குழுவினருக்கு தமிழ்ச்செல்வன் எடுத்துரைத்தார்.

வடக்கு-கிழக்கில் அண்மைக்காலத்தில் நடை பெற்ற வன்முறைகள் குறித்து பெரும்பான்மை மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழு கவலை தெரிவித்தது.

இதற்குப் பதிலளித்த சு.ப.தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளை நிறைவேற்றக் கோரி அமைதி வழியில் போராடி வந்த மக்கள் மீது இராணுவம் நெருக்குவாரங்களை ஏற்படுத்தியதன் விளைவாக அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

நம்பிக்கையைக் கட்டியெழுப்ப அரசியல் பேச்சுகளுக்கான சாதகமான சூழலை உருவாக்கவேண்டும், இராணுவ நடமாட்டத்தைக் குறைத்து மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும், தங்களது முன்னுரிமைப் பிரச்சினைகளுக்காகப் போராடும் தமிழ் மக்களின் போராட்டங்களை ஒடுக்கிற இராணுவத்தினரது மனோநிலை மாறவேண்டும்- என்றும் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு இருப்பதாக மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழு கவலை தெரிவித்தது.

இது தொடர்பில் விளக்கம் அளித்த சு.ப.தமிழ்ச்செல்வன்-

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழ மக்களின் அமைதிக்காக பாடுபடுகிறவர்கள். இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்டு, அரசியல் தீர்வு உருவாக்கப்பட்டு, தமிழர்கள் வாழ்வில் இயல்பு வாழ்க்கை திரும்பும் நிலையில் சாதாரண சிங்கள மக்களும் தமிழர்களின் சிறந்த நண்பர்களாக இருப்பார்கள்.

அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விவசாயிகள் விவசாய செயற்பாடுகளை மேற்கொள்ள இயலவில்லை; மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியவில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் முக்கியமான சரத்துக்களில் ஒன்றான ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவில்லை. இவைகள் தான் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க தடைகளாக இருக்கின்றன- என்றார் தமிழ்ச்செல்வன்.

இந்த விடயங்களைத் தென்னிலங்கை மக்களிடம் தெரிவிப்பதாகவும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்கான முழு ஆதரவை சர்வதேச சமூகம் அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் பெரும்பான்மை மதத் தலைமைப் பிரதிநிதிகள் குழு உறுதியளித்துள்ளது.

## வெலிகந்தையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமிருந்து உரிய பிரதிபலிப்புகள் வராமை போன்றவற்றால் விரக்தியடைந்த உறவினர்கள் மேற்படி நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அருணேசராசா சதீஷ்ஹரன், கையிலாப்பிள்ளை ரவீந்திரன், காசிநாதர் கணேசலிங்கம், சண்முகநாதன் சுஜேந்திரன், தம்பிராஜா வசந்தராஜன், கதிரகாமர் தங்கராசா, தனுஷ்கோடி பிரேமினி ஆகிய தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் ஒட்டுப்படைகளால் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## கண்காணிப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பானு உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர். ஜெனீவாப் பேச்சுக்களுக்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ளும் பொருட்டே இச்சந்திப்பு இடம்பெற்றதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (எ-6)

## மரண அறிவித்தல்

### டாக்டர் க.த.சோமசேகரம்

(நயினை நாகபூசணி அம்பாள், தம்பையா தாகசாந்தி நிலையம்)

நயினாதீவு டாக்டர் க.த.சோமசேகரம் அவர்கள் நேற்று (08.02.2006) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா- நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற நாகலிங்கம் -முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புக் கணவரும் டாக்டர் லோகநாதன், டாக்டர் சபாநாதன், குகனேசன் (அதிபர்,யா/நாகபூசணி வித்தியாசாலை), நாகேஸ்வரி (பொன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யுகலட்சுமி, பிரேமலதா (ஆசிரியர், யா/பெரியபுலம் ம.வி), தர்மகுலராணி (ஆசிரியர், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஆகியோரின் அன்பு மாமனாரும்.காலஞ்சென்ற தியாகராசா (அதிபர்), தாமோதிரம்பிள்ளை (வர்த்தகர்), சாமியாபிள்ளை (வர்த்தர்), தர்மலிங்கம் (அதிபர்) மற்றும் டாக்டர் மயில்வாகனம், கணபதிப்பிள்ளை (கனடா), டாக்டர் கனகசபை, டாக்டர் கோபால் (கனடா), பேரின்பநாயகி (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மாரிமுத்து, நடராசா, சீவரத்தினம் (அதிபர்), புவனேஸ்வரி, சரஸ்வதி மற்றும் மனோன்மணி, சுப்பிரமணியம், முத்துலிங்கம் (வர்த்தகர்), மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சசிகுமார், காலஞ்சென்ற மாகோ, பாலகுமார், உஷாயினி, ரஜீவ், சுகன்யா, கற்பகரூபி, விமலசேகர், அமுதகௌரி ஆகியோரின் பேரனும் விதுசன், தர்சிகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் சோ.சபாநாதன் (மகன்)
எயிற்லைன்ஸ் மருத்துவ நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

5ம் வட்டாரம்
நயினாதீவு.

(சி-47778)
(54-16-49)


விக்னா கல்வி நிறுவனம்
O/L DAY CLASS பிரிவு 1
ஆரம்பமாகிவிட்டது
வாரத்தில் 5 நாள்கள் (8.50 - 2.50)
அனுமதிகள் வழங்கப் படுகின்றன.

பொருளியற் கல்லூரி
A/L 2006
எல்லைக் கிராமவியல்
By B. முகுந்தன் B.B.A. (Hons)
ஆரம்பம்:- சனி 11 மணி - யாழ்.
(11-02-2006) சனி - 2 மணி - இணுவில்
Note:- இப்பாட அலகு புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டது. (46528)

பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி.
புலமை பரிசில் வகுப்புகள்
ஆரம்பம்:- 11.02.2006 சனி 5 p.m.
* தரம் 3,4,5 இற்கான புதிய பிரிவுகளும் அன்று ஆரம்பம்.
ஆசிரியர்: கபிலன்
* கொழும்பு, கண்டி, மேல்மாகாண வினாத்தாள் பரீட்சை நடைபெறும். வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.
பொருளியல் வகுப்புகள் மீண்டும் 10.02.2006 வெள்ளி பி.ப. 4மணிக்கு ஆரம்ப மாகிறது. (46591)

Just
Change your life
(46592)

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
ஆரம்பம் 11,15.02.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 5 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |

Softview Computer College
Www.scclanka.com scclanka@hotmail.com
43, Arasady Road,Thaddatheru Junction,Jaffna.
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

aat மின் ஜூன் பரீட்சைக்கான பதிவுகள் 28.02.2006 வரை நீடிக்கப்பட்டுள்ளது
புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat Foundation and Intermediate
Chartered Accountancy
Foundation
விரிவுரைகள் அனைத்தும் விரைவில் ஆரம்பமாக உள்ளன.
26.02.2006 இற்கு முன் உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துங்கள்
IPAS 199,Main Street, (Primier Bakery Building) Jaffna. Tel.: 0777 563294, 0777 270452
Office Hours:- Mon.,Wed.,Fri. 9.00 a.m. -1.00 p.m Sat.and Sun 8.30 a.m.-11.30
(C-47782)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் ...ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org